**கரூர் நகராட்சியில் 2018ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 27ம் தேதி திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

**தனி அலுவலர்**
**கரூர் நகராட்சி**

**1)**தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் **1920** அட்டவணை **4**ம் விதிகளில் கூறப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் நகர்ப்புற உள்ளாட்சிகளில் **2018–2019**ம் முதலாம் அரையாண்டு **(01.04.2018)** முதல் பொதுசொத்துவரி சீராய்வு மேற்கொள்ள அரசாணை எண்.**73** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA-IV) துறை நாள்.**19.07.2018**ல் கீழ்க்கண்டவாறு சொத்துவரி உயர்வு செய்ய அரசாணை வெளியிடப்பட்டது.

| வ.எண் | கட்டிடங்களின் விபரம் | சொத்துவரி உயர்வு விகிதம் |
|---|---|---|
| 1 | குடியிருப்பு கட்டிடங்கள் | 50% மிகாமல் |
| 2 | வாடகை குடியிருப்பு கட்டிடங்கள் | 100% மிகாமல் |
| 3 | குடியிருப்பு அல்லாத கட்டிடங்கள் | 100% மிகாமல் |

மேற்காணும் சொத்துவரி உயர்வு விகிதங்கள் அரசாணை எண்.**76** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA-IV) துறை நாள்.**26.07.2018**ல் கீழ்க்கண்டவாறு திருத்தம் செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

| வ.எண் | கட்டிடங்களின் விபரம் | சொத்துவரி உயர்வு விகிதம் |
|---|---|---|
| 1 | குடியிருப்பு கட்டிடங்கள் | 50% மிகாமல் |
| 2 | வாடகை குடியிருப்பு கட்டிடங்கள் | 50% மிகாமல் |
| 3 | குடியிருப்பு அல்லாத கட்டிடங்கள் | 100% மிகாமல் |

மேற்காண் திருத்தம் செய்து பெறப்பட்ட அரசாணையில் வரிசை எண்.**2**இல் உள்ளதை நீக்கம் செய்து உத்திரவிடப்பட்டு வரப்பெற்றுள்ளது. எனவே, பெறப்பட்ட அரசாணைகள் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் அரசாணையின்படி இந்நகராட்சியில் **2018–19** முதல் அரையாண்டு **01.04.2018** முதல் சொத்துவரி சீராய்வு மேற்கொள்ளவும், மேற்படி பணிகளுக்கான உத்தேச செலவினம் ரூ.**7.50**இலட்சம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
1)பதிவு செய்யலாம்.
**2)2018–2019** முதல் அரையாண்டு முதல் சொத்துவரி சீராய்வு மேற்கொள்ளவும் உத்தேச செலவினம் ரூ.**7.50**இலட்சம் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(அ1/8220/2018)**

தீர்மான எண்.**1000** அனுமதிக்கப்பட்டது.

**2)**இந்நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட பொதுஇடங்களில் கம்பி வேலி அமைக்கப்பட வேண்டும் என இணை ஆணையர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை அவர்களின் **04.06.2018**ல் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது எனவும், நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட இடத்தில் கம்பி வேலி அமைத்து பெயர் பலகை அமைக்க நகரமைப்பு அலுவலர் அவர்களால் பின்வரும் இடங்களை குறிப்பிட்டுள்ளார்.

| வ. எண். | வார்டு எண் | தெருவின் பெயர் | இடத்தின் அளவு | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|---|
| 1) | 37 | ராமலிங்க நகர் SF.No.409/1, 410/1 | **345.14** மீட்டர் | ரூ.**3,50,000/–** |
| 2) | 37 | வீட்டுவசதி வாரிய குடியிருப்பு SF.No.355 B,C, 356B, 357B | **151.08** மீட்டர் | ரூ.**1,60,000/–** |
| 3) | 37 | Park & Play Field S.F.No. | **338.60** மீட்டர் | ரூ.**3,50,000/–** |

| | | | | |
|---|---|---|---|---|
| 4) | 38 | திண்ணப்பா நகர் S.F.No.316, 317/A | 161.11 மீட்டர் | ரூ.1,70,000/- |
| 5) | 48 | அம்மன் கார்டன் SF.No.722 | 225.61 மீட்டர் | ரூ.2,30,000/- |
| 6) | 46 | யசோதா நகர் SF.No.486 Part | 64.62 மீட்டர் | ரூ.70,000/- |
| 7) | 14 | காமதேனு நகர் SF.No.255/1, 255/6, 252/2, 256/6 | 102.90 மீட்டர் | ரூ.1,05,000/- |
| | | **மொத்தம்** | **1391.06 மீட்டர்** | **ரூ.14,35,000/-** |

மேற்கண்ட இடங்களில் கம்பிவேலி அமைக்கத் தயார் செய்யப்பட்ட மதிப்பீடுகளுக்கு அதன் எதிரே குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டுத் தொகைகளின்படி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கான மதிப்பீடுகளின்படி மதிப்பீட்டு தொகைக்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ1/2018)

தீர்மான எண்.1001 அனுமதிக்கப்பட்டது.

3)இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.37 காந்திகிராமம் இரட்டை நீர்த்தேக்கத் தொட்டி அமைந்துள்ள வளாகத்தில் கரூர்-திருச்சி பிரதான சாலையினை ஒட்டி வளாகத்தின் வடபுறத்தில் 7 எண்கள் கடைகள் கட்டி இந்நகராட்சியின் வருவாயினைப் பெருக்கும் வகையில் உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட இடத்தில் 7 கடைகள் கட்டுவதற்குத் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.23,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்காகும் செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ1/2018)

தீர்மான எண்.1002 அனுமதிக்கப்பட்டது.

4)இந்நகராட்சிக்கு சொந்தமான வாங்கல் சாலையில் வடக்கில் அமைந்துள்ள குப்பை கிடங்கின் வடபுறம் சுற்றுச்சுவர் இல்லாமல் உள்ளதாலும், சமூக விரோதிகள் எளிதாக உள்ளே சென்று குப்பைகளை தீயிட்டு விடுகின்றனர். இதனால் பொதுமக்களுக்கு பெரிதும் பாதிப்பு ஏற்படுகின்றது. எனவே, குப்பை கிடங்கின் பாதுகாப்பு கருதி மதில் சுவர் அமைக்க வேண்டியதின் அவசியத்தினை கருத்தில் கொண்டு உரக்கிடங்கில் மதில் சுவர் விடுபட்ட பகுதியில் சுமார் 150மீட்டர் நீளமும் ஏற்கனவே உள்ள மதில் சுவர் இடிந்து பழுதாகியுள்ள பகுதியில் சுமார் 75மீட்டர் நீளமும் புதிதாக மதில் சுவர் கட்ட ஆகும் உத்தே மதிப்பீடு ரூ.13.00இலட்சம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படிய பணியின் அவசர அவசியம் கருதி பணியினை உடன் மேற்கொள்ள மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளி கோரி பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ1/2018)

தீர்மான எண்.1003 அனுமதிக்கப்பட்டது.

5)கரூர் நகராட்சி உரக்கிடங்கில் திடக்கழிவுகளை கையாளும் முறைகளை மெஷினரிகளை இயக்கி பயன்படுத்தும் வகையில் மின்மோட்டார்களுக்கும் 100KW திறன்கொண்ட மின்இணைப்பு வழங்க மின்வாரியத்திற்கு விண்ணப்பம் வழங்கப்பட்டதற்கு மின்சார வாரியத்திற்கு இவ்வலுவலக கடித ந.க.எண்.இ3/10696/2017 நாள்.06.07.2018ல் அனுமதி கோரியதில் உதவி பொறியாளர் அவர்களின் கடித எண். LR.No.AE/JE/O&M/F.APP.Tracking D.No.128/2018 நாள்.24.07.2018ன்படி

| Account Code | Amount (Rs.) |
|---|---|
| 48100-CC Deposit | Rs.57,600-00 |
| 55101 – Development charges | Rs.19,200-00 |
| **Total** | **Rs.76,800-00** |

தொகை ரூ.76,800/—யை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

**1)**மன்றம் அனுமதிக்கலாம்.

**2)**மேற்படி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் புதிய மின்இணைப்பு பெறுவதற்கு செலுத்த அவசர அவசியத்தினை கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் பொதுநிதியிலிருந்து தொகை ரூ.76,800/—யை மின்சார வாரியத்திற்கு செலுத்தியமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம். **(இ3/2018)**

தீர்மான எண்.1004 அங்கீகரிக்கப்பட்டது.

**6)**கரூர் நகராட்சியில் **48** வார்டுகளில் உள்ள **67428** குடியிருப்புகளின் தற்போதைய மக்கள் தொகை **2,24,378**ன்படி தினசரி உற்பத்தியாகும் திடக்கழிவுகளில் மக்கும் தன்மையுடைய திடக்கழிவுகளை உரமாக தயார் செய்து பயன்படுத்தும் வகையிலும், நகராட்சி உரக்கிடங்கில் உள்ள பழைய குப்பைகளை அப்புறப்படுத்தவும் தேவையான நுண்ணுயிர் உரமாக்கும் மையங்கள் மற்றும் அதற்குகுாய அணுகுசாலை மதில் சுவர் கட்டுமான பணிகளுடன் கீழ்காணும் விபரப்படி பணிகளை மேற்கொள்ள திட்ட மதிப்பீடு தயார் செய்து சமர்ப்பிக்கப்பட்டது.

மேற்படி திட்ட மதிப்பீடுகளுக்கு **7**வது உயர்நிலை திட்டக்குழு கூட்ட நடவடிக்கைகள் நாள்.**13.08.2018**ன்படி அனுமதி அளிக்கப்பட்டு திட்ட மதிப்பீட்டின்படி தயார் செய்யப்பட்ட பணிகளின் மதிப்பீடுகளுக்கு கீழ்காணும் நிதி பங்களிப்பின்படி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைகள் கடித ந.க.எண்.**22866**/பி3/**2018** நாள்.**23.08.2018**ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பணிகளின் விபரப்படி பணிகளை மேற்கொள்ள நிதி ஒதுக்கீட்டினை பயன்படுத்தி கொள்ளவும், நிதி ஒதுக்கீட்டின்படி நகராட்சி பங்களிப்பு தொகையினை நகராட்சி பொதுநிதியின் மூலம் மேற்கொண்டு பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**நிதி பங்களிப்பு விபரம்**

| மத்திய அரசின் பங்கு | மாநில அரசின் பங்கு | நகராட்சி பங்கு | மொத்த மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|
| 35% | 55% | 10% | 100% |

**பணிகளின் விபரம்**

நுண்ணுயிர் உரக்கிடங்கு மையம் மற்றும் அணுகுசாலை மதில் சுவர் அமைக்கும் பணி

| வ.எண் | நுண்ணுயிர் உரக்கிடங்கு அமையவிடம் குறித்த பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|
| 1 | கரூர் நகராட்சி அரிக்காரம்பாளையம் பகுதியில் 5TPD கொள்ளளவு கொண்ட நுண்ணுயிர் உரக்கிடங்கு மையம் (MCC) மற்றும் அணுகுசாலை, மதில் சுவர் கட்டும் பணி | ரூ.**75.00** இலட்சம் |
| 2 | கரூர் நகராட்சி வி.வி.ஜி. நகர், வெங்கமேடு பகுதியில் 5TPD கொள்ளளவு கொண்ட நுண்ணுயிர் உரக்கிடங்கு மையம் (MCC) மற்றும் அணுகுசாலை, மதில் சுவர் கட்டும் பணி | ரூ.**75.00** இலட்சம் |
| 3 | கரூர் நகராட்சி இரட்டை வாய்க்கால் பகுதியில் 5TPD கொள்ளளவு கொண்ட நுண்ணுயிர் உரக்கிடங்கு மையம் (MCC) மற்றும் அணுகுசாலை, மதில் சுவர் கட்டும் பணி | ரூ.**75.00** இலட்சம் |
| 4 | கரூர் நகராட்சி தாந்தோன்றிமலை மயானப் பகுதியில் 5TPD கொள்ளளவு கொண்ட நுண்ணுயிர் உரக்கிடங்கு மையம் (MCC) மற்றும் அணுகுசாலை, மதில் சுவர் கட்டும் பணி | ரூ.**75.00** இலட்சம் |
| 5 | கரூர் நகராட்சி வ.ஊ.சி. தெரு பகுதியில் 4TPD கொள்ளளவு கொண்ட நுண்ணுயிர் உரக்கிடங்கு மையம் (MCC) மற்றும் அணுகுசாலை, மதில் சுவர் கட்டும் பணி | ரூ.**57.10** இலட்சம் |
| 6 | கரூர் நகராட்சி வடக்கு பசுபதிபாளையம் பகுதியில் 4TPD கொள்ளளவு கொண்ட நுண்ணுயிர் உரக்கிடங்கு மையம் (MCC) மற்றும் அணுகுசாலை, மதில் சுவர் கட்டும் பணி | ரூ.**57.10** இலட்சம் |
| 7 | கரூர் நகராட்சி வடக்கு காந்திகிராமம் பகுதியில் 4TPD | ரூ.**57.10** இலட்சம் |

| | | |
|---|---|---|
| | கொள்ளளவு கொண்ட நுண்ணுயிர் உரக்கிடங்கு மையம் (MCC) மற்றும் அணுகுசாலை, மதில் சுவர் கட்டும் பணி | |
| 8 | கரூர் நகராட்சி காந்திகிராமம் பகுதியில் 4TPD கொள்ளளவு கொண்ட நுண்ணுயிர் உரக்கிடங்கு மையம் (MCC) மற்றும் அணுகுசாலை, மதில் சுவர் கட்டும் பணி | ரூ.57.10 இலட்சம் |
| 9 | கரூர் நகராட்சி அருகம்பாளையம் பகுதியில் 3TPD கொள்ளளவு கொண்ட நுண்ணுயிர் உரக்கிடங்கு மையம் (MCC) மற்றும் அணுகுசாலை, மதில் சுவர் கட்டும் பணி | ரூ.49.70 இலட்சம் |
| 10 | கரூர் நகராட்சி காமராஜர் நகர் பகுதியில் 3TPD கொள்ளளவு கொண்ட நுண்ணுயிர் உரக்கிடங்கு மையம் (MCC) மற்றும் அணுகுசாலை, மதில் சுவர் கட்டும் பணி | ரூ.49.70 இலட்சம் |
| 11 | கரூர் நகராட்சி பாலம்மாள்புரம் மயானப் பகுதியில் 2TPD கொள்ளளவு கொண்ட நுண்ணுயிர் உரக்கிடங்கு மையம் (MCC) மற்றும் அணுகுசாலை, மதில் சுவர் கட்டும் பணி | ரூ.39.70 இலட்சம் |
| 12 | கரூர் நகராட்சி பசுபதிபுரம் பகுதியில் 2TPD கொள்ளளவு கொண்ட நுண்ணுயிர் உரக்கிடங்கு மையம் (MCC) மற்றும் அணுகுசாலை, மதில் சுவர் கட்டும் பணி | ரூ.39.70 இலட்சம் |

**முதல்நிலை சேகரிப்பு பணிக்கு தேவையான வாகனங்கள் கொள்முதல் செய்தல்**

| வ.எண் | பணியின் விபரம் | எண்ணிக்கை | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|
| 1 | மின்கலம் மூலம் இயக்கக்கூடிய குப்பைகள் சேகரம் செய்யும் வாகனம் (Battery operated vehicle) கொள்முதல் செய்தல் | 85 | ரூ.153.00 இலட்சம் |
| 2 | 2க.மீ., கொள்ளளவு கொண்ட குப்பை சேகரம் செய்யும் வாகனம் கொள்முதல் செய்தல் (Light Commercial Vehicle) | 7 | ரூ.39.20 இலட்சம் |

**அலுவலகக் குறிப்பு**

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.22866/பி3/2018 நாள்.23.08.2018ன்படி கரூர் நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் பரவலாக்கப்பட்ட நுண்ணுயிர் உரக்கிடங்கு மையங்கள் கட்டும் பணி மற்றும் முதல்நிலை சேகரிப்பிற்கு தேவையான வாகனங்களை கொள்முதல் செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடுகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கியுள்ள உத்திரவின்படி பணிகளை மேற்கொள்ளவும், நிதி ஒதுக்கீட்டு பங்களிப்பின்படி மொத்த மதிப்பீட்டு தொகையில் மத்திய அரசின் பங்குத் தொகை, மாநில அரசின் பங்குத் தொகை மற்றும் நகராட்சியின் பங்குத் தொகை என நிதி பங்களிப்பின்படி நகராட்சியின் பங்குத் தொகையான 10சதவீத தொகை ரூ.89.94இலட்சத்தினை நகராட்சி பொதுநிதியின் மூலம் மேற்கொண்டு திட்டப் பணிகளை மேற்கொண்டு செய்து முடிக்க மன்றம் அனுமதிக்கலாம். (இ1/4804/2018)

தீர்மான எண்.1005 அனுமதிக்கப்பட்டது.

7)கரூர் நகராட்சி பொறியாளர் நிலை–II பணியிடம் 01.10.2013 முதல் 30.09.2014 வரை நீடித்து வைத்துக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.6568/2009/எப்3 நாள்.03.12.2013–ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. கரூர் நகராட்சி பொறியாளர் நிலை–II பணியிடம் 1987ம் ஆண்டு முதல் தொடர்ந்து இருந்து வருகிறது. அரசாணை எண்.19 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.14.01.2011–ன்படி கரூர் நகராட்சியுடன் தாந்தோணி நகராட்சி, இனாம் கரூர் நகராட்சி மற்றும் சணப்பிரட்டி ஊராட்சியை இணைத்து எல்லை விரிவாக்கம் மற்றும் சணப்பிரட்டி ஊராட்சியை இணைத்து எல்லை விரிவாக்கம் செய்து ஒருங்கிணைந்த நகராட்சியாக 25.10.2011 முதல் செயல்பட்டு வருவதுடன், கரூர் நகராட்சி 48 வார்டுகளை உள்ளடக்கிய இந்நகரம் 53.26 ச.கி.மீட்டர் பரப்பளவு கொண்டுள்ளது. இந்நகருக்கு தினசரி வெளியூரிலிருந்து வியாபார நிமித்தம் ஒரு லட்சத்திற்கு மேல் பொதுமக்கள் வந்து செல்கின்றனர். மேலும் வளர்ந்து வரும் இந்நகராட்சிக்கு அடிப்படை வசதி மற்றும் அபிவிருத்தித் திட்டப் பணிகள், குடிநீர் திட்டப் பணிகள், பாதாள சாக்கடை பணிகள், தெருவிளக்கு பராமரிப்பு பணிகள், போக்குவரத்து மேலாண்மை திட்டப் பணிகள் ஆகிய பணிகளை கண்காணிக்கும் பொருட்டு நகராட்சி பொறியாளர் நிலை–II பணியிடம் அவசியம் தேவைப்படுவதால் 01.10.2014 முதல் 30.09.2015 வரை மற்றும் 01.10.2015 முதல் 30.09.2016 வரை

மற்றும் 01.10.2016 முதல் 30.09.2017 வரை மற்றும் 01.10.2017 முதல் 30.09.2018 வரை நீடித்து வைத்துக் கொள்ள கோரும் கருத்துருக்களை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

எனவே மேற்படி கருத்துருக்கள்மீது அனுமதியை எதிநோக்கி நகராட்சி பொறியாளர் நிலை–II பணியிடம் அவசியம் தேவை என்பதால் மேலும் 01.10.2018 முதல் நிரந்தரமாக வைத்துக் கொள்ள அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம். (இ4/2365/2007)

தீர்மான எண்.1006 அனுமதிக்கப்பட்டது.

**8)**கரூர் நகராட்சி தெருவிளக்குகள் பராமரிப்பு பணிக்காக தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்ட மினி ஏணி லாரி ஓட்டுநர் பணியிடம் 01.10.2013 முதல் 30.09.2014 வரை நீடித்து வைத்துக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 6568/2009/எப்3 நாள்.03.12.2013–ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

கரூர் நகராட்சி தெருவிளக்குகள் பராமரிப்பு பணிக்காக தோற்றுவிக்கப்பட்ட மினி ஏணி லாரி ஓட்டுநர் பணியிடம் 33 வருடங்கள் தொடர்ந்து இருந்து வருகிறது. அரசாணை எண்.19 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.14.01.2011–ன்படி கரூர் நகராட்சியுடன் தாந்தோணி நகராட்சி, இனாம் கரூர் நகராட்சி மற்றும் சணப்பிரட்டி ஊராட்சியை இணைத்து எல்லை விரிவாக்கம் செய்து ஒருங்கிணைந்த நகராட்சியாக 25.10.2011 முதல் செயல்பட்டு வருவதுடன் கரூர் நகராட்சி 48 வார்டுகளை உள்ளடக்கிய நகரமாகும் என்பதால் மேற்படி வார்டுகளில் தெருவிளக்கு அதிக அளவில் பராமரிக்க வேண்டியுள்ளதாலும் ஒரு மினி ஏணி லாரி ஓட்டுநர் பணியிடம் அவசியம் தேவைப்படுவதால் 01.10.2014 முதல் 30.09.2015 வரை, 01.10.2015 முதல் 30.09.2016 வரை, 01.10.2016 முதல் 30.09.2017 வரை மற்றும் 01.10.2017 முதல் 30.09.2018 வரை நீடித்து வைத்து கொள்ளக்கோரும் கருத்துருக்களை நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அனுப்பப்பட்டுள்ளது.

எனவே மேற்படி கருத்துருக்கள் மீது அனுமதியை எதிர்நோக்கி ஒரு மினி ஏணி லாரி ஓட்டுநர் பணியிடம் அவசியம் தேவை என்பதால் மேலும் 01.10.2018 முதல் நிரந்தரமாக நீடித்து வைத்துக் கொள்ள அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம். (இ4/2366/2007)

தீர்மான எண்.1007 அனுமதிக்கப்பட்டது.

**9)**கரூர் நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள தொழில்நுட்பமில்லாத பதினாறு பணியிடங்களை 01.10.2013 முதல் 30.09.2014 வரை நீடித்து வைத்துக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.6568/2009/எப்3 நாள்.03.12.2013–ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

கரூர் நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள கீழ்க்கண்டுள்ள தொழில்நுட்பமில்லாத பதினாறு பணியிடங்கள் குடிநீர் விநியோகம் மற்றும் விஸ்தரிப்புத் திட்டத்தினை செயல்படுத்த பணியிடங்கள்

| வஎண். | பணியிடங்கள் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | ரிசர்வயர் காவலர் | 3 |
| 2. | தலைமை நீரேற்று நிலைய கிளீனர் | 3 |
| 3. | தலைமை நீரேற்று நிலைய காவலர் | 2 |
| 4. | பி.எப்.கிளீனர் | 5 |
| 5. | குழாய் திறப்பாளர் | 3 |
| | **மொத்தம்** | **16** |

மேற்படி பணியிடங்கள் இந்நகராட்சியில் தொடர்ந்து இருந்து வருகிறது. தற்போது கரூர் நகராட்சியுடன், தாந்தோணி நகராட்சி இனாம் கரூர் நகராட்சி மற்றும் சணப்பிரட்டி ஊராட்சியை இணைத்து எல்லை விரிவாக்கம் செய்து ஒருங்கிணைந்த நகராட்சியாக 25.10.2011 முதல் செயல்பட்டு வருவதுடன் கரூர் நகராட்சி 48 வார்டுகளை உள்ளடக்கிய பெரு நகரமாகும். குடிநீர் விநியோகம் மற்றும் குடிநீர் விஸ்தரிப்பு திட்டத்திற்கு மேற்படி பணியிடங்கள் தொடர்ந்து அவசியம் தேவைப்படுவதால் 01.10.2014 முதல் 30.09.2018 வரை நிரந்தரமாக நீடித்து வைத்துக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளது.

மேற்படி கருத்துருக்கள்மீது அனுமதியை எதிர்நோக்கி இந்நகராட்சிக்கு தொழில் நுட்பமில்லாத பதினாறு பணியிடங்கள் அவசியம் தேவை என்பதால் மேலும் 01.10.2018 முதல் நிரந்தரமாக நீடித்து வைத்துக் கொள்ள அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம். (இ4/2368/2007)

தீர்மான எண்.1008 அனுமதிக்கப்பட்டது.

**10)**கரூர் நகராட்சி பொறியியல் பிரிவில் குடிநீர் விஸ்தரிப்பு திட்டத்திற்காக 10 (பத்து) தொழில் நுட்பப் பணியிடங்கள் 01.10.2013 முதல் 30.09.2014 வரை நீடித்து வைத்துக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.6568/2009/எப்3 நாள்.03.12.2013–ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

கரூர் நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள கீழ்க்கண்டுள்ள 10 (பத்து) தொழில்நுட்ப பணியிடங்கள்

| வ.எண். | பணியிடங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | மின்பணியாளர் நிலை– 1 | 3 |
| 2. | மின்பணியாளர் நிலை – 2 | 3 |
| 3. | குழாய் ஆய்வர் | 1 |
| 4. | குழாய் பொருத்துனர் நிலை– 1 | 1 |
| 5. | குழாய் பொருத்துனர் நிலை– 2 | 2 |
| | **மொத்தம்** | **10** |

மேற்படி பணியிடங்கள் 29 ஆண்டுகளாக தொடர்ந்து இருந்து வருகிறது. தற்போது கரூர் நகராட்சியுடன் தாந்தோணி நகராட்சி, இனாம் கரூர் நகராட்சி மற்றும் சணப்பிரட்டி ஊராட்சியை இணைத்து எல்லை விரிவாக்கம் செய்து ஒருங்கிணைந்த நகராட்சியாக 25.10.2011 முதல் செயல்பட்டு வருவதுடன் கரூர் நகராட்சி 48 வார்டுகளை உள்ளடக்கிய பெரு நகரமாகும். தற்போது குடிநீர் விநியோகப் பணிக்காக ஆறு தலைமை நீரேற்று நிலையங்களிலிருந்து நகருக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேற்படி குடிநீரை நகருக்கு விநியோகம் செய்யவும், புதிய குடிநீர் குழாய் இணைப்பு வழங்கவும், மேற்படி 10 (பத்து) தொழில்நுட்பப் பணியிடங்கள் அவசியம் தேவைப்படுவதால் 01.10.2014 முதல் 30.09.2018 வரை நிரந்தரமாக நீடித்து வைத்துக் கொள்ள ஏற்கனவே நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளது மேற்படி கருத்துருக்கள் மீது அனுமதியை எதிர்நோக்கி மேற்படி பத்து தொழில்நுட்ப பணியிடங்கள் அவசியம் தேவை என்பதால் மேலும் 01.10.2018 முதல் நிரந்தரமாக வைதது்க் கொள்ள அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்ப மன்றத்தின்அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம். (இ4/2367/2007)

தீர்மான எண்.1009 அனுமதிக்கப்பட்டது.

**11)**சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் திரு.அமிர்தலிங்கம் என்பவர் தனக்கு சொந்தமான இடத்தில் உள்ள முட்புதர்களை அகற்ற உரிய காவல்துறை பாதுகாப்பு வழங்கக் கோரி நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு எண்.W.P(MD)No.259/2016 நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கு நடத்தியதற்கான வழக்காடு கட்டணம் ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) வழக்கறிஞர் திரு.டி.ரகு அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
1) மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி வழக்கிற்கு ஆகும் செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3)அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதற்கும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம். (எச்1/9231/2014)

தீர்மான எண்.1010 அனுமதிக்கப்பட்டது.

12)கரூர் நகராட்சிக்குட்பட்ட லட்சுமி நகர் விஸ்தரிப்பு பகுதியில் வார்டு 12–ல் புதிய விளக்கு அமைக்கும் அவசியத்தினை கருத்தில் கொண்டு மின்பாதை அமைத்து மின்இணைப்பு வழங்குமாறு மின்சாரவாரியத்திற்கு இவ்வலுவலக கடிதம் நக.எண்.2949/2018/E3 நாள்.07.05.2018 அனுமதி கோரியதில் தமிழ்நாடு மின்சாரவாரிய இளமின்பொறியாளர் கரூர் அவர்களின் கடித எண். இ.மி.பொ/ /கொ.தனி/ஏண்.118/2018 நாள்.28.06.2018–ன்படி ஒரு புதிய தெருவிளக்கு அமைக்க மதிப்பீட்டுத் தொகை ரூ.13,970/–ஐ செலுத்த கோரியதின் படி தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மேற்படி தொகையினை செலுத்தகோரியதின்படி தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மேற்படி தொகையினை செலுத்த மன்றத்தின்அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
மேற்படி ஒரு புதிய தெருவிளக்கு அமைக்க மின்வாரிய கேட்புத் தொகையினை மின்வாரியத்திற்கு செலுத்த அவசர அவசியத்தினை கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையர் (ம) தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் நகராட்சி பொதுநிதியிலிருந்து தொகை ரூ.13,970/– ஐ மின்சார வாரியத்திற்கு செலுத்தியமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.
(இ3/2018)

தீர்மான எண்.1011 அங்கீகரிக்கப்பட்டது.

13) கரூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் பணிபுரிந்து வரும் துப்புரவு பணியாளர்களுக்கு துப்புரவு பணிகள் (ம) கழிவு நீர் கால்வாய்கள் சுத்தம் செய்யும் பணிகள் மேற்கொள்ள தேவையான கீழ்க்கண்ட தளவாட சாமான்களை சப்ளை செய்யும் பணிக்கு முதல் முறையாக 04.06.2018ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விபரம் | நிறுவனத்தின் பெயர் | | | |
|---|---|---|---|---|---|
| | | ஸ்ரீ அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ் நாமக்கல் | | ஸ்ரீ காளியம்ன் டிரேடிங்க கார்ப்பரேஷன் நாமக்கல் | |
| | | எண்ணிக்கை | ஒன்றுக்கு | எண்ணிக்கை | ஒன்றுக்கு |
| 1 | மூங்கில் கூடை | 150 | ரூ.350/–<br>(ரூபாய் முன்னூற்று ஐம்பது மட்டும்) | 150 | ரூ.344/–<br>(ரூபாய் முன்னூற்று நாற்பத்து நான்கு மட்டும்) |
| 2 | தட்டி மார்(தென்னைமார்) | 300 | ரூ.290/–<br>(ரூபாய் இருநூற்று தொன்னூறு மட்டும்) | 300 | ரூ.283/–<br>(ரூபாய் இருநூற்று என்பத்து மூன்று மட்டும்) |
| 3 | சாக்கடை கரண்டி | 150 | ரூ.334/–<br>(ரூபாய் முன்னூற்று முப்பத்து நான்கு மட்டும்) | 150 | ரூ.323/–<br>(ரூபாய் முன்னூற்று இருபத்து மூன்று மட்டும்) |
| 4 | 4பல் கொக்கி பிடியுடன் | 50 | ரூ.890/–<br>(ரூபாய் என்னூற்று தொன்னூறு மட்டும்) | 50 | ரூ.884/–<br>(ரூபாய் என்னூற்று என்பத்து நான்கு மட்டும்) |
| 5 | 2பல் கொக்கி பிடியுடன் | 150 | ரூ.738/–<br>(ரூபாய் எழுநூற்று முப்பத்து எட்டு மட்டும்) | 150 | ரூ.729/–<br>(ரூபாய் எழுநூற்று இருபத்து ஒன்பது மட்டும்) |
| 6 | கூட்டு மார் தென்னை | 1000 | ரூ.40/–<br>(ரூபாய் நாற்பது மட்டும்) | 1000 | ரூ.37.50/–<br>(ரூபாய் முப்பத்து எழு பைசா ஐடமபது மட்டும்) |
| 7 | மண்வெட்டி பிடியுடன் | 150 | ரூ.392/– | 150 | ரூ.384/– |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | (ரூபாய் முன்னூற்று தென்னூற்று இரண்டு மட்டும்) | | (ரூபாய் முன்னூற்று என்பத்து நான்கு மட்டும்) |
| 8 | பிளாஸ்டிக் சட்டி | 200 | ரூ.338/— (ரூபாய் முன்னூற்று முப்பத்து எட்டு மட்டும்) | 200 | ரூ.334/— (ரூபாய் முன்னூற்று முப்பத்து நான்கு மட்டும்) |
| 9 | பிளாஸ்டிக் கூடை | 100 | ரூ.648/— (ரூபாய் அறுநூற்று நாற்பத்து எட்டு மட்டும்) | 100 | ரூ.639/— (ரூபாய் அறுநூற்று முப்பத்து ஒன்பது மட்டும்) |
| 10 | அரிவாள் பிடியுடன் | 50 | ரூ.626/— (ரூபாய் அறுநூற்று இருபத்து ஆறு மட்டும்) | 50 | ரூ.618/— (ரூபாய் அறுநூற்று பதினெட்டு மட்டும்) |
| 11 | மண் சுரண்டி | 100 | ரூ.140/— (ரூபாய் நூற்று நாற்பது மட்டும்) | 100 | ரூ.134/— (ரூபாய் நூற்று முப்பத்து நான்கு மட்டும்) |
| 12 | மண் தள்ளும் பிரஸ் | 100 | ரூ.285/— (ரூபாய் இருநூற்று என்பத்து ஐந்து மட்டும்) | 100 | ரூ.283/— (ரூபாய் இருநூற்று என்பத்து மூன்று மட்டும்) |
| 13 | கடப்பாறை | 10 | ரூ.847/— (ரூபாய் எந்நூற்று நாற்பத்து ஏழு மட்டும்) | 10 | ரூ.837/— (ரூபாய் எந்நூற்று முப்பத்து ஏழு மட்டும்) |

**அ.கு**

**1)**மேற்படி பணிக்கு நகர் மன்ற தீர்மான எண்.**928** நாள்.**07.06.2018**ல் ரூ.**6.50** லட்சத்திற்கு செலவினை மேற்கொள்ள மன்றம் அனுமதி அளித்துள்ளது.
**2)**மேற்காணும் பொருட்களை சப்ளை செய்ய இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.ஸ்ரீகாளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன், நாமக்கல் என்ற நிறுவனதின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். **(எச்1/2120/2018)**

தீர்மான எண்.1012 ஏற்கப்பட்டது.

**14)**கரூர் நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி பொறியாளர் அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வரும் ஈப்பு எண். TN 47 AH 8887 (MAHINDRA BOLIRO) க்கு புதியதாக 4 எண்ணிக்கை கொண்ட TYRE, TUBE, FLAB SET சப்ளை செய்து பொருத்தும் பணிக்கு நகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பெறப்பட்ட விலைப்புள்ளி விபரம் பின்வருமாறு

| வ.எண் | நிறுவனத்தின் விலைப்புள்ளி விபரம் | டயர் அளவு மற்றும் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|
| 1 | MSP TYRES | 215-75 R15 TL 4TYRES | ரூ.31,000/— |
| 2 | F1 CARS | 215-75 R15 TL 4 TYRES | ரூ.31,200/— |
| 3 | THIRU KUMARAN TYRES | 215-75 R15 TL 4 TYRES | ரூ.31,400/— |

அலுவலகக் குறிப்பு

**1)**மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள MSP TYRES அவர்களின் விலைப்புள்ளி ஏற்று பணி உத்திரவு வழங்கியதற்கும், செலவினத் தொகை ரூ.**31,000/—**யை வழங்குவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
**2)**மேற்படி வாகன தேவையின் அவசியம் கருதி நகராட்சி சட்டம் **1920** பிரிவு **15**ன்படி பணியை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.
**3)**மேற்கண்ட பணிக்குண்டான செலவினத் தொகையை நகராட்சி குடிநீர் நிதியின் மூலமாக மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(எச்4/4681/2018)**

தீர்மான எண்.1013 அனுமதிக்கப்பட்டது.

**15)**கரூர் நகராட்சிக்கு சொந்தமான பாலம்மாள்புரம் நீரூந்து நிலையத்தில் மின்தடை மற்றும் மின் சம்பந்தமான பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள கைக்கருவிகள் (Tools) இல்லாத காரணத்தினால் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள இயலாதநிலை உள்ளதாக மின்பணியாளர் நிலை—1 விண்ணப்பத்தில் தெரிவித்துள்ளதன்படி உதவி பொறியாளர் அவர்களின் குறிப்பில் மேற்கண்ட

கைக்கருவிகள் (Tools) வாங்க ஆகும் செலவின மதிப்பீட்டுத் தொகை ரூ.15,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.15,000/— நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ3/2018)

தீர்மான எண்.1014 அனுமதிக்கப்பட்டது.

16)சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் Roc.No.15940/2015/WB நாள்.25.09.2017ல் மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட (CUG) அலைபேசி பயன்பாட்டாளர் குழுமத்தில் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் உள்ளிட்ட நகராட்சி நிர்வாக ஆணையரகம், அனைத்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் உள்ளிட்ட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம், அனைத்து நகராட்சி ஆணையர்கள், பொறியாளர்கள் என 313 குழு உறுப்பினர்களை CUG ல் கொண்டு வருவது தொடர்பாக ஆணைப் பிறப்பிக்கப்பட்டும், இதனை M/s பாரதி ஏர்டெல் நிறுவனம் மூலம் மேற்கொள்ளுமாறு உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டு இதன் பிரகாரம் கரூர் நகராட்சி ஆணையர் அவர்களுக்கு 7397396247 எண்ணும், நகராட்சி பொறியாளர் அவர்களுக்கு 7397396248 எண்ணும் வழங்கப்பட்டு நடைமுறையில் உள்ளது. இதற்கான கட்டணத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும் என நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. நகராட்சி ஆணையர், நகராட்சி பொறியாளர் ஆகியோரது ஏர்டெல் நிறுவனத்தில் CUGல் உள்ள இரண்டு இணைப்புகளுக்கு மாதாந்திர கட்டணத்தை பொதுநிதியில் செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்கண்ட பாரதி ஏர்டெல் நிறுவனத்திடம் இருந்து பெறப்பட்ட நகராட்சி ஆணையர், நகராட்சி பொறியாளர் அவர்களது இரண்டு இணைப்பு எண்களுக்கும் 11/2017ம் மாதத்திலிருந்து மாதாந்திர கட்டணத்தை பொதுநிதியில் செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ3/2018)

தீர்மான எண்.1015 அனுமதிக்கப்பட்டது.

17) கரூர் நகராட்சியில் கூடுதல் புதிய அலுவலக கட்டடம் ரூ.300.00இலட்ச மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு கட்டுமானப் பணிகள் ஒப்பந்தகாரர் மூலம் நடைபெற்று பணிகள் முடிவுற்றது. மேலும் உட்கட்டமைப்பு பணிகள், முகப்பு பணிகள், நகர்மன்ற கூட இருக்கைகள் என கூடுதல் பணிகள் மேற்கொள்ள தேவைப்படும் நிதி ஒதுக்கீட்டினை 2017ம் ஆண்டிற்கான சட்டமன்ற கூட்டத் தொடரில் 21.06.2017ல் நடைபெற்ற உள்ளாட்சி மான்ய கோரிக்கையின்போது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் ரூ.400.00இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாலும், நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண்.25306/16/பி2 நாள்.04.07.2017ன்படி நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி விரிவான மதிப்பீடு தயார் செய்து நகராட்சிகளின் நிர்வாக ஆணையர் அவர்களது அலுவலக தலைமை பொறியாளர் அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.35683/2014/டிஒ2 நாள்.16.05.2018ன்படி தொழில்நுட்ப அனுமதி பெற்று 27.06.2018ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் ஒப்பந்தகாரர்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்

**<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.400.00இலட்சம்</u>**

| வ. எண் | ஒப்பந்ததாரர் விபரம் | ஒப்பந்தப்புள்ளியின் | | விலை குறைப்புக்கு பின் குறிப்பிட்டுள்ள ஒப்பந்த தொகை | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | | ஒப்பந்த தொகை | மதிப்பீட்டு சதவீதம் | | |
| 1 | Siva Parameshwari Engineering Construction | 3,37,74,675 | 5.30 % கூடுதல் | 3,36,29,175 | 4.85 % |
| 2 | S.P.&Co., | 3,52,67,111.90 | 9.96% | — | — |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | T.Puthupalayam | | கூடுதல் | | |

மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் சிவா பரமேஸ்வரி இன்ஜினியரிங் கன்ஸ்ட்ரக்சன் என்பவர் குறைந்த தொகைக்கும் மதிப்பீட்டு தொகையினைவிட 5.30 சதவீதம் கூடுதல் தொகைக்கு ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ளார்.

மேற்படி பணிக்கு வரப்பெற்ற குறைந்த தொகையுடைய (LI) ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியின் விலை விபரத்தினை குறைத்து தரக்கோரி இவ்வலுவலக கடித ந.க.எண்.இ1/4618/2014 நாள்.05.07.2018ல் கோரியதில் ஒப்பந்ததாரர் தனது 09.07.2018ம் தேதிய கடிதத்தில் தற்போது GST காரணமாக கட்டுமான பணிக்கு தேவையான பொருட்கள் மற்றும் பணியாளர்களின் விலை விபரம் உயர்ந்துள்ளதால் ஒப்பந்தப்புள்ளியின் விலை விபரத்தினை மொத்த மதிப்பீட்டு தொகையில் கூடுதலாக 5.30சதவீதம் குறிப்பிட்டுள்ளதை குறைத்து தற்போது மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட ஒப்பந்தப்புள்ளி படிவ வரிசை எண்.30ன் விலை விபரத்தினை ரூ.1300ல் இருந்து ரூ.1106 க்கு குறைத்து 4.85 கூடுதல் என ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பந்தத் தொகையினை குறைத்து கொடுத்துள்ளார். எனவே, மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1)மேற்படி பணிக்கு இது முதல் ஒப்பந்தப்புள்ளி அழைப்பு ஆகும். பணிக்கான மதிப்பீடு 2017–2018ம் ஆண்டிற்கான பொதுப்பணி துறையில் செந்தார விலை விபர அடிப்படையில் தயார் செய்யப்பட்டுள்ளது. மறுஒப்பந்தப்புள்ளி கோரினால் மதிப்பீட்டின் விலை விபரம் நடப்பாண்டிற்கான பொதுப்பணித் துறையின் செந்தார விலை விபரத்தின்படி திருத்திய மதிப்பீடு தயார் செய்ய நேரிடுவதால் சுமார் 8 முதல் 10 சதவீதம் கூடுதல் தொகை வரப்பெறுவதாலும், மேலும் மேற்படி அரசின் திட்டப் பணியாக இருப்பதால் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டியதின் அவசியத்தினை கருத்தில் கொண்டும், கட்டட கட்டுமான பணியின் பெரும்பாலான பணிகள் Finising பணிகளாக இருப்பதால் கட்டடப் பணியின் தன்மையினை கருத்தில் கொண்டும் நகர்மன்ற அதிகார வரம்பிற்குட்பட்ட 5 சதவீத தொகைக்குள் கூடுதல் தொகைக்குள்ளாக இருப்பதினால் ஒப்பந்தகாரர் விலை குறைப்பு செய்து கொடுத்ததின் அடிப்படையில் ஒப்பந்ததாரரிடம் 4.35சதவீதம் கூடுதலான தொகையுடைய ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

2)மேலும் மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று Letter of Acceptance பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். (இ1/4618/2014)

தீர்மான எண்.1016 அங்கீகரிக்கப்பட்டது.

18)கரூர் நகராட்சி பொறியியல் பிரிவு வாகன எண். TN 47 AJ 8690 க்கு மூன்றாவது இலவச OIL SERVICE செய்வதற்கு MAHINDRA நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற சர்வீஸ் டீலர் M/s MARWELLS SYNDICATE PRIVATE LIMITED COIMBATORE ரூ.22,984/–க்கு மதிப்பீடு பட்டியல் வழங்கியுள்ளது. மேற்படி வாகனத்தை மூன்றாம் ஆயில் சர்வீஸ் செய்வதற்கு M/s MARWELLS SYNDICATE PRIVATE LIMITED COIMBATORE நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கவும் இதற்குண்டான செலவினத் தொகை ரூ.22,984/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1)பொதுசுகாதாரப் பிரிவு இயந்திர வாகன எண்.TN 47 AJ 8690 க்கு OIL SERVICE செய்வதற்கு MAHINDRA நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற சர்வீஸ் டீலர் M/s MARWELLS SYNDICATE PRIVATE LIMITED COIMBATORE நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கவும், இதற்குண்டான செலவுத் தொகை ரூ.22,984/–க்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

2)மேற்படி செலவினத் தொகையை பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

3)பொதுசுகாதாரப் பிரிவு வாகனத்தின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (எச்4/6392/2018)

தீர்மான எண்.1017 அனுமதிக்கப்பட்டது.

**19)**இந்நகராட்சிக்குட்பட்ட கரூர் மாவட்ட விளையாட்டு மைதானத்தில் சுதந்திர தினவிழா சிறப்பாகக் கொண்டாடும் வகையில் இந்நகராட்சியின் சார்பில் விளையாட்டு அரங்கை சீரமைத்தல், குடிதண்ணீர், சுகாதார வசதிகள், தற்காலிகக் கழிவறைகள் அமைத்தல், மாண்புமிகு சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர், மாவட்ட நீதிபதி உள்ளிட்ட உயர் அலுவலர்களுக்கு சிறப்பு நாற்காலி வசதிகள் செய்தல், ஒலிபெருக்கி வசதி, சுதந்திர போராட்ட பயனாளிகள் மற்றும் மாணவர்கள் அமரும் வகையில் ஷாமியானா பந்தல் மற்றும் நாற்காலிகள் அமைத்தல் போன்ற பணிகளையும், நகராட்சி அலுவலகத்தில் சுதந்திர தினவிழா கொண்டாடும்வகையில் ஷாமியானா பந்தல் அமைத்தல், மின்விளக்கு அலங்காரம் செய்தல், தலைவர்கள் சிலைக்கு பராமரித்து விளக்குகள் அமைத்தல், வாழைமரம் கட்டுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளவேண்டும். மேலும் மாவட்ட விளையாட்டரங்கில் வர்ணம் பூசி புதுப்பிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்கூறிய அனைத்து பணிகளையும் செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3.00இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | கரூர் மாவட்ட விளையாட்டரங்கம் மற்றும் நகராட்சி அலுவலகத்தில் சுதந்திர தினவிழா ஏற்பாடுகள் செய்யும் பணி | ரூ.1.50இலட்சம் |
| 2 | கரூர் மாவட்ட விளையாட்டரங்கிற்கு வர்ணம் பூசும் பணிகள் செய்தல் | ரூ.1.50இலட்ட்ம் |
| | **மொத்தம்** | **ரூ.3.00இலட்சம்** |

மேற்கண்ட பணிகள் செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.00இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1)மேற்படி பணிக்கான மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்.

2)மேலும் மேற்படி பணியினை உடன் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொள்ளப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். (இ1/2018)

தீர்மான எண்.1018 அங்கீகரிக்கப்பட்டது.

**20)**கரூர் நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதாரப் பிரிவு மூலமாக பராமரிக்கப்பட்டு இயங்கி வரும் இயந்திர வாகனம் Kubota 850 மணி கால நேரம் இயங்கிவிட்டதால் மேற்படி இயந்திர வாகனத்தின் பராமரிப்பு பணிகளை கருத்தில் கொண்டு ENGINE OIL SERVICE பணிகளை மேற்கொள்வதற்கு Kubota நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணிமனை டீலர் S.G.J.Auto CARE(P) Ltd அவர்களிடம் விலைப்பட்டியல் பெறப்பட்டதின்படி பணிக்கான செலவினப்பட்டியல் தொகை ரூ.4,271/-யை மேற்படி பணியினை மேற்கொள்வதற்கு நகராட்சி ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)பொது சுகாதாரப் பிரிவு இயந்திர வாகனம் Kubota-க்கு ENGINE OIL SERVICE பணிகளை செய்வதற்கு Kubota நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற விற்பனை டீலர் S.G.J Auto CARE(P) LTD நகராட்சி ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளியினை ஏற்று வேலை உத்தரவு வழங்கவும் இதற்குண்டான செலவு தொகை ரூ.4,271/-யை நகராட்சி வருவாய் நிதியின் மூலம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம். (எச்4/5958/2018)

தீர்மான எண்.1019 அனுமதிக்கப்பட்டது.

**21)**கரூர் நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கிவரும் வாகன எண்.TN 47 AH 8809 (COMPACTOR) க்கு தகுதிகாண் சான்று பெறுவதற்கு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை கருத்தில் கொண்டு மேற்படி வாகனத்திற்கு பழுது பணிகளை செய்வதற்கு EICHER நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணிமனை M/s Jai laxmi Auto works & Agencies (P) Ltd., Karur அவர்களிடம் நேரடியாக விலைப்பட்டியல் பெறப்பட்டதின்படி பணிக்கான செலவுத் தொகை ரூ.46,668/-க்கு மேற்படி பணியினை மேற்கொள்ள நகராட்சி ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

**1)**மன்றம் அனுமதிக்கலாம்.

**2)**பொதுசுகாதாரப் பிரிவு வாகன எண்.TN 47 AH 8809 க்கு பழுது பணிகளை செய்வதற்கு EICHER நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணிமனை M/s Jai laxmi Auto works & Agencies (P) Ltd., Karur நிறுவனத்தின் விலைப்பட்டியல் தொகை ரூ.**46,668/–** நகராட்சி ஆணையாளர் அவர்களின் அனுமதி பெற்று மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியின் மூலம் வழங்கிட மன்றம் அனுமதி வழங்கலாம். **(எச்4/4682/2018)**

தீர்மான எண்.**1020** அனுமதிக்கப்பட்டது.

**22)**நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் K.Dis.No.6093/P3/2018 நாள்.**07.04.2018**ல் கரூர் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செயல்படுத்திட திறந்தவெளி ஒப்பந்த அழைப்பின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் **190**பணியாளர்களை கொண்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. தற்போது மாவட்ட ஆட்சித் தலைவர் கரூர் அவர்களின் தரம்படுத்தப்பட்ட அட்டவணைப்படி **2017–2018**ம் ஆண்டுக்கு ஒரு பணியாளருக்கு ரூ.**315/–** என அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி **190** பணியாளர்களுக்கு உத்தேச செலவினம் கீழ்க்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| | | | | |
|---|---|---|---|---|
| Collectorate Wages Rates | 315.00 | 190 | 365 | 21845250 |
| EPF 13.15% | 41.42 | 190 | 365 | 2872477 |
| ESI 4.75% | 14.96 | 190 | 365 | 1037476 |
| Personal Accidental policy 500 per year | 1.37 | 190 | 365 | 95009 |
| Uniform charges 2400 | 6.58 | 190 | 365 | 456323 |
| Safety Equipments 3600 | 9.86 | 190 | 365 | 683791 |
| Total | 389.19 | 190 | 365 | 26990327 |
| Administration Charges | 31.50 | 190 | 365 | 2184525 |
| Total | 420.69 | | | 29174852 |

மேற்கண்ட கணக்கின்படி ரூ.**29174852/–** உத்தேச செலவினத்தில் தனியார் மூலம் ஒப்பந்தப்புள்ளிகளை பெற்று பணி மேற்கொள்ள நகர்மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

**1)**நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைகள் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**2)**சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறைகளில் தெரிவித்த வழிகாட்டுதலின்படி ஒப்பந்தப்புள்ளி கோரி அனுமதிக்கலாம்.

**3)**மேற்கண்ட உத்தேச செலவினத் தொகை ரூ.**29174852/–**யை நகராட்சி பொதுநிதியிலிருந்து அல்லது திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதியிலிருந்தோ மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(எச்1/3280/18)**

தீர்மான எண்.**1021** அனுமதிக்கப்பட்டது.

**23)**தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம்–**1920** – பிரிவு **124**–டி–யின்படியும், **12.01.1999**ம் தேதியிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு ஆணையின்படியும், நகர்மன்ற தீர்மானம் எண்.**919** நாள்.**07.06.2018**–யின்படியும் இந்நகராட்சியில் **01.10.2018** முதல் தொழில்வரியினை **30** சதவீதம் உயர்வு செய்யப்பட்டதை கரூர் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மூலம் இரண்டு தினசரி காலை மற்றும் மாலை நாளிதழ்களில் **06.07.2018**ம் தேதியன்று ஒரு நாள் மட்டும் விளம்பரம் செய்தமைக்கான விளம்பரக் கட்டணத் தொகை பட்டியலின்படி

தினத்தந்தி தொகை ரூ. **13,104/–**
மாலைமலர் தொகை ரூ. **4,659/–**
––––––––
ரூ. **17,763/–**
––––––––

(ரூபாய் பதினேழாயிரத்து எழுநூற்றி அறுபத்தி மூன்று மட்டும் ) பத்திரிக்கையின் விளம்பர மேலாளர் அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம். **(அ8/4865/2018)**

தீர்மான எண்.**1022** அனுமதிக்கப்பட்டது.

24)அரசாணை எண்.78 மற்றும் 172 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை ந.வ.4(3), நாள்.04.05.2017 மற்றும் 13.10.2017–ல் அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துல் திட்டத்தின் கீழ் முறைப்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது. அதன்தொடர்ச்சியாக நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.60978/2014/டிபி3, நாள்.07.06.2018ல் இத்திட்டத்தின் இலக்கினை அடைய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அனுமதியற்ற மனைபிரிவுகள் மற்றும் மனைகளை முறைப்படுத்தும் திட்டம் பொதுமக்கள் அறிந்து எளிதில் பயன்பெறும் வண்ணம் சிறப்பு முகாம்கள் நடத்தப்படுவதற்கு சாமியானா பந்தல், நாற்காலிகள், மைக்செட் அமைக்கும் பணி மற்றும் பொதுமக்கள் எளிதில் அறியும் வண்ணம் கரூர் நகரங்களில் முக்கியமான இடங்களில் 30 எண்ணிக்கைகள் விளம்பர தட்டிகள் அமைக்கும் பணிக்கு விலைப்புள்ளி கோரப்பட்டுள்ளது. மேற்கண்ட இரண்டு இனங்களுக்கும் கீழ்க்கண்ட விபரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற விலைப்புள்ளிகளை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**I. சாமியானா பந்தல், நாற்காலிகள், மைக்செட் மற்றும் ஆட்டோ விளம்பரம்**

| வ. எண். | பொருட்கள் விபரம் | KRS லைட்ஸ் & சவுண்ட் சர்வீஸ், கரூர் (விலைப்புள்ளி தொகை) | செல்வம் சவுண்ட் சர்வீஸ், தாந்தோணிமலை, கரூர் (விலைப்புள்ளி தொகை) | மணி சவுண்ட் சர்வீஸ், பசுபதிபாளையம், கரூர் (விலைப்புள்ளி தொகை) |
|---|---|---|---|---|
| 1 | சாமியானா பந்தல் | 6000 | 6500 | 7000 |
| 2 | சேர் (1–க்கு) | 10 | 12 | 13 |
| 3 | டேபிள் (1–க்கு) | 200 | 300 | 500 |
| 4 | சைடுஅடைப்பு (1–க்கு) | 500 | 550 | 600 |
| 5 | கார்பட் மேட் (1 சதுரடிக்கு) | 2 | 2.50 | 3 |
| 6 | மைக்செட் | 3000 | 3500 | 4000 |
| 7 | ஆட்டோ விளம்பரம் | 2000 | 2500 | 3000 |
| | | 11,712 | 12,864 | 17,053 |

**II. விளம்பர தட்டிகள் அமைக்கும் பணிக்கு**

| வ. எண். | விளம்பர தட்டி அளவு விபரம் | ஸ்ரீ ஆதவன் பிளக்ஸ் பிரிண்டிங் & ஸ்டிக்கர்ஸ், செங்குந்தபுரம், கரூர் (விலைப்புள்ளி தொகை) | சக்தி டிஜிட்டல் பிரிண்டிங் & ஸ்டிக்கர்ஸ், பழைய பைபாஸ் ரோடு, கரூர் (விலைப்புள்ளி தொகை) | செல்வி டிஜிட்டல் பிரிண்டிங் ராமகிருஷ்ணபுரம், கரூர் (விலைப்புள்ளி தொகை) |
|---|---|---|---|---|
| 1 | 3 x 2 = 6 எண்ணம் | 3600 | 3960 | 4320 |
| 2 | 4 x 2 = 11 எண்ணம் | 8800 | 9680 | 10500 |
| 3 | 4 x 2.5 = 1 எண்ணம் | 1000 | 1100 | 1200 |
| 4 | 4 x 3 = 4 எண்ணம் | 4800 | 5280 | 5760 |
| 5 | 4 x 3.5 = 1 எண்ணம் | 1400 | 1540 | 1680 |
| 6 | 4 x 1 = 1 எண்ணம் | 400 | 440 | 480 |
| 7 | 10 x 1 = 1 எண்ணம் | 850 | 850 | 850 |
| 8 | 4 x 2 = 1 எண்ணம் | 680 | 680 | 680 |
| | | 21530 | 23530 | 25530 |

**அலுவலக குறிப்பு**

1)மேற்படி முதலில் குறிப்பிட்டுள்ள பணிக்கு வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள KRS லைட்ஸ் & சவுண்ட் சர்வீஸ், 118, திண்டுக்கல் ரோடு, கரூர் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி இரண்டாவதாக குறிப்பிட்டுள்ள பணிக்கு வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ ஆதவன் பிளக்ஸ் பிரிண்டிங் & ஸ்டிக்கர்ஸ், நெ.47, 80அடி சாலை, செங்குந்தபுரம், கரூர் – 2. அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

3)அவசர அவசியம் கருதி மன்ற முன் அனுமதியை எதிர்நோக்கி மேற்கண்ட நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம். (எப்1/3091/2015)

தீர்மான எண்.1023 அனுமதிக்கப்பட்டது.

25)கரூர் நகராட்சியில் TURIP 2017-2018ல் தார்சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. முடிக்கப்பட்ட தார்சாலை பணிகளுக்கு மூன்றாம் நபர் (Third party inspection) ஆய்வு செய்து தரச் சான்று பெறுவதற்கு IRTT –Erode பொறியியல் கல்லூரியில் கோரப்பட்டதில் 34 தார்சாலை பணிகளுக்கு ஆய்வு செய்து சான்று அளிக்க ஆய்வுக் கட்டணம் ரூ.40,120/– செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தொகையை செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1)மேற்படி பணிக்கு ஆய்வுக்கட்டணம் ரூ.40,120/– நகராட்சி திட்ட நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

2)மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதியை பெற்று மேற்படி செலவினம் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம். (இ1/8107/2017)

தீர்மான எண்.1024 அங்கீகரிக்கப்பட்டது.

26)கரூர் நகர இரயில்வே நிலையம் முதல் தேசிய நெடுஞ்சாலை NH-67 வரை 40'0 அகலத்தில் தார்சாலை மற்றும் வடிகால் அமைக்கும் பணிகளுக்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய தகுதி வாய்ந்த வல்லுநர்கள் மூலம் தயார் செய்யும் பணி மேற்கொள்ள 24.05.2018ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தப்புள்ளியில் அளித்துள்ள விலை விகிதம் | மதிப்பீட்டைவிட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | Mansarovar RB&Building Engineers Salem | ரூ.5.70இலட்சம் | ரூ.5,68,000/– | குறைவு |
| 2 | வசந்தவேல், கன்சல்டண்ட் சேலம் | | ரூ.5,78,000/– | அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு நகர்மன்ற தீர்மான எண். நாள்.30.04.2018ல் ரூ.5.70லட்சத்திற்குள் செலவு செய்ய அனுமதி அளித்துள்ளது.

2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு.Mansarovar RB&Building Engineers Salem அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். (இ1/4716/2018)

தீர்மான எண்.1025 ஏற்கப்பட்டது.

27) கரூர் நகராட்சியில் உழவர் சந்தை அருகில் மற்றும் அரசு மருத்துவமனை வளாகம் ஆகிய இரண்டு இடங்களில் அம்மா உணவகம் செயல்பட்டு வருகிறது. உழுவர் சந்தை அருகிலுள்ள அம்மா உணவகம் மையத்தில் உபயோகப்படுத்தப்படம் நீராவி அடுப்பு பாய்லரில் ஓட்டை விழுந்துள்ளதால், சீரான முறையில் சமையல் பணி மேற்கொள்ள இயலவில்லை. எனவும், அதனால் மெயின் Streemer, boiler welding work, Pipe gate value மாற்றிஅமைத்தல், குடிநீர் குழாய் இணைப்பு பணிகள், குடிநீர் தொட்டி (PVC) அமைத்தல், பழுதடைந்துள்ள தரைத்தளம் சீரமைத்தல், மற்றும் சமையல் உபகரணங்களில் பழுது நீக்கி சர்வீஸ் செய்தல் மற்றும் அரசு மருத்துவமனை வளாகத்திலுள்ள அம்மா உணவகத்தில், water cooler welding work செய்தல், boiler leg welding செய்தல், இட்லி பாய்லர் சரி செய்தல், சமையல் கிரைண்டரில் பழுதடைந்துள்ள Bladeகளை மாற்றி புதியதாக அமைத்து சரி செய்தல் மற்றும் சமையல் உபகரணங்களில் சர்வீஸ்

செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1.70 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
1)மன்றம் அனுமதி அளிக்கலாம்
2)மேற்படி பணிக்கான தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.1.70 இலட்சத்திற்கு நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3)மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி செய்து முடிக்க மன்றம் அனுமதிக்கலாம். (இ1/2018)

தீர்மான எண்.1026 அனுமதிக்கப்பட்டது.

28)கரூர் நகராட்சிக்குட்பட்ட Compost plant அமைந்துள்ள Biomethanation plantல் அமைந்துள்ள 50KVA Genset நிறுவப்பட்ட நாளில் இருந்து 250hr ஓடிய பிறகு ஒரு முறை oil service மற்றும் 1000 hr ஓடிய பிறகு ஒரு முறை oil Service செய்யப்பட்டுள்ளது. அடுத்த Oil service 2000 hr முடிந்த பிறகு மீண்டும் Oil service பண்ண வேண்டியது அவசியமாகிறது. Genset Oil service செய்வதற்கு பண்ண வேண்டியது அவசியமாகிறது. Genset oil service செய்வதற்கு 20140 oil 13lit 2oil filter மற்றும் Coolent oil 5 lit ஆகிய பொருட்கள் வாங்கி Service செய்ய வேண்டியதாக உள்ளது. மேற்கண்ட பொருட்கள் வாங்குவதற்கு Oil service செய்வதற்கும் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.18,000/- மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
1)மன்றம் அனுமதி அளிக்கலாம்
2)மேற்படி பணிக்கான தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.18,000/- க்கு நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ1/2018)

தீர்மான எண்.1027 அனுமதிக்கப்பட்டது.

29)கரூர் நகராட்சிக்கு சொந்தமான பசுபதிபாளையம் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள பல்வகை பயன்பாட்டு மேடைகளில் மாணவர்களின் அறிவுத்திறனை மேம்படுத்தும் வகையில் நவீன தொழில்நுட்பம் முறையில் உலக வரைபடம் அமைப்பதற்கான தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.95 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
1)மன்றம் அனுமதி அளிக்கலாம்
2)மேற்படி பணிக்கான தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.3.95 இலட்சத்தினை நகராட்சி கல்வி நிதியில் இருந்து செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ1/2018)

தீர்மான எண்.1028 அனுமதிக்கப்பட்டது.

30)கரூர் நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி அமைக்கப்பட்டுள்ள பல்வகை பயன்பாட்டு மேடைகளில் மாணவர்களின் அறிவுத்திறனை மேம்படுத்தும் வகையில் நவீன தொழில்நுட்பம் முறையில் உலக வரைபடம் அமைப்பதற்கான தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.95 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
1)மன்றம் அனுமதி அளிக்கலாம்
2)மேற்படி பணிக்கான தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.3.95 இலட்சத்தினை நகராட்சி கல்வி நிதியில் இருந்து செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ1/2018)

தீர்மான எண்.1029 அனுமதிக்கப்பட்டது.

31)இந்நகராட்சிக்கு 2013-2014ஆம் ஆண்டிற்கான பகுதி–II திட்டத்தில் கீழ்காணும் விபரப்படி 5.00 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் கட்டும் பணிக்கு நிதி ஒதுக்கீடு செய்து நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.41777/2013/-2/P1, நாள்.26.06.2013ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|
| 1 | ஜெயப்பிரகாஷ் பள்ளி அருகில் 5.00 இலட்சம் கொள்ளளவு கொண்ட புதிய மேல்நிலை நீர்தேக்க தொட்டி கட்டுதல் | ரூ.65.00இலட்சம் |

ஜெயப்பிரகாஷ் பள்ளி அருகில் புதிய மேல்நிலை நீர்தேக்க தொட்டி கட்டும் பணிக்கு ஜெயப்பிரகாஸ் பள்ளி அருகில் போதிய இடவசதி இல்லாத காரணத்தாலும், மேடான பகுதியான மாவடியான் பள்ளி அருகில் மேல்நிலைநீர்தேக்க தொட்டி கட்டினால் 15,16,23,24,25,26,27 வார்டுகளுக்கு பயனுள்ளதாக இருக்கும் என நகர்மன்ற தீர்மான எண்.2023, நாள்.31.01.2014ல் தீர்மானத்தின் அடிப்படையில் மாவடியான் பள்ளி அருகில் புதிய மேல்நிலை நீர்தேக்க தொட்டி கட்டும் பணிக்கு அரசு முதன்மை செயலர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சென்னை அவர்களின் கடித ந.க.எண். 546/ந.நிIV(1) 2015-1, நாள்.04.05.2015ல் திருத்திய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. திருத்திய நிர்வாக அனுமதியின்படி மாவடியான் பள்ளி அருகில் புதிய மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டும் பணிக்கு உரிய மதிப்பீடு தயார் செய்து தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.25000/2013/Do, நாள்.03.07.2015ன்படி தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 09.09.2015 அன்று வரப்பெற்ற M/s.CVM&Co ஈரோடு என்பவரது 3.50 சதவீதம் மதிப்பீட்டினை விட கூடுதல் தொகையுடைய ஒப்பந்தப்பள்ளியினை மன்ற தீர்மான எண்.338, நாள்.20.11.2015ன்படி மன்ற ஒப்புதல் பெற்று இவ்வலுவலக கடித ந.க.எண். 4975/2013/இ1, நாள்.30.12.2015ல் பணி ஆணை வழங்கப்பட்டது.

மேற்படி பணியினை ஒப்பந்ததாரர் மூலம் துவங்க முற்பட்ட நிலையில் கட்டுமான இடத்தின் மண் ஆய்வறிக்கையின்படி கட்டுமான வடிவமைப்பினை பெறுவதற்கு (Structural Design) இவ்வலுவலக கடித ந.க.எண்.4975/2013/இ1, நாள்.01.11.2016ன்படி சேலம் அரசு பொறியியில் கல்லூாரி மூலம் தயார் செய்து தரக் கோரியதில் மண் ஆய்வறிக்கையின்படி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டுமான பணிக்கான அஸ்திவாரத்தினை ரேப்ட்பவுன்டேசனாக (Raft Foundation) அமைக்கப்பட வேண்டும் என கட்டுமான வடிவமைப்பினை தயார் செய்து சமர்ப்பிக்கப்பட்டது.

மேற்படி பணிக்கான மதிப்பீட்டில் தனித்தனி கான்கீரிட் தூண்கள் எழுப்பதற்கான முறையில் அஸ்திவாரம் அமைக்க மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளதாலும் ரேப்ட்பவுண்டேசன் அமைத்தல் மதிப்பீட்டினைவிட கூடுதல் செலவினம் ஏற்படும் என்பதால் ரேப்ட்பவுன்டேசனுக்கு உரிய மதிப்பீட்டின்படி வரப்பெற்ற கூடுதல் தொகை ரூ.23.15 இலட்சத்தினை சேர்த்து மொத்த மதிப்பீடு ரூ.88.15 இலட்சத்திற்கு திருத்திய நிர்வாக அனுமதி வழங்க கோரி இவ்வலுவலக கடித ந.க.எண்.4975/2013/இ1, நாள்.21.07.2017ன்படி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் சமர்ப்பிக்கப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.41777/2012/தி2, நாள்.11.05.2018ல் திருத்திய நிர்வாக அனுமதி பெறப்பட்டது. திருத்திய நிர்வாக அனுமதியின்படி அசல் மதிப்பீட்டினை விட கூடுதல் தொகை வரப்பெற்றதின் அடிப்படையில் கூடுதல் தொகையின்படி திருத்திய மதிப்பீட்டிற்கு தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைகள் கடித ந.க.எண்.1041/2017/Do1, நாள்.26.07.2018ன் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்படி திருத்திய நிர்வாக அனுமதி அளித்த உத்தரவில் பணிக்கு உரிய தொழில்நுட்ப அனுமதி பெற்ற பின்னர் பணியினை தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் மற்றும் விதிகளின்படி பணிகளை மேற்கொள்ளப்படவேண்டும் என தெரிவிக்கப்படுள்ளதால் மேற்படி பணிக்கு அசல் மதிப்பீட்டின்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரி வரப்பெற்ற ஒப்பந்ததாரர் M/s.CVM&Co ஈரோடு என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று இவ்வலுவலக கடித ந.க.எண்.4975/2013/இ1, நாள்.30.12.2015ன்படி வழங்கிய பணியானை ரத்து செய்து விட்டு புதிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை செய்து முடிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு:**
**1)** மன்றம் அனுமதிக்கலாம்
**2)** மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் அசல் மதிப்பீட்டின்படி ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்ததாரர் M/s.CVM&Co ஈரோடு என்பவருக்கு **30.12.2015**ல் வழங்கிய பணி ஆணையினை ரத்து செய்துவிட்டு திருத்திய மதிப்பீட்டிற்கான தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்ட மதிப்பீட்டின்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோர நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
**(இ1/4975/2013)**

தீர்மான எண்.**1030** அங்கீகரிக்கப்பட்டது.

**32)**கரூர் நகராட்சி வார்டு எண்.**16** ரயில்வே ஸ்டேசன் எதிர்புறமுள்ள இரத்தினம் சாலை பழுதடைந்துள்ளதால் பொதுமக்களின் போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக உள்ளதால், சாலையை சீரமைக்க வேண்டி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.**9.80**இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
**1)**மன்றம் அனுமதி அளிக்கலாம்.
**2)**மேற்படி பணிக்கான தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.**9.80**இலட்சத்திற்கு நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
**3)**மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி செய்து முடிக்க மன்றம் அனுமதிக்கலாம். **(இ1/9502/2018)**

தீர்மான எண்.**1031** அனுமதிக்கப்பட்டது.

**33)**கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**12** லெட்சுமி நகர் **2**வது கிராஸ் பகுதியில் புதிய தெருவிளக்கு அமைப்பதற்கு தெருவிளக்கு மின்பாதை அமைத்து மின்இணைப்பு வழங்குமாறு மின்சார வாரியத்திற்கு இவ்வலுவலக கடித நாள்.**07.05.2018**ல் அனுமதி கோரியதில் தமிழ்நாடு மின்சார வாரிய செயற்பொறியாளர் அவர்களின் கடிதம் LR.NO.AE/JE/O&M/OK1/F.APP. Tracking/D.No.120/2018-19 Dated.21.07.2018 வரப்பெற்ற மதிப்பீட்டுத் தொகை கீழ்க்கண்டவாறு

| Account Code | Amount (Rs.) |
|---|---|
| 55101 - Development charges | Rs.600-00 |
| 61907- Testing fees | Rs.75-00 |
| 61955 – Estimate charges (61904 c) | Rs.15515-00 |
| **Total** | Rs.16190-00 |

தொகை ரூ.**16,190/–**யை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
**1)**மன்றம் அனுமதிக்கலாம்.
**2)**மேற்படி லெட்சுமி நகர் **2**வது கிராஸ் பகுதியில் புதிய தெருவிளக்கு மின்பாதை அமைத்து மின்இணைப்பு பெறுவதற்கு மதிப்பீட்டுத் தொகை ரூ.**16,190/–**யை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் மேற்படி தொகையை பொதுநிதியிலிருந்து செலுத்தியமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம். **(இ3/8251/2018)**

தீர்மான எண்.**1032** அங்கீகரிக்கப்பட்டது.

**34)**இந்நகராட்சியில் **25.10.2011**ம் ஆண்டில் கரூர் நகராட்சியுடன் இனாம்கரூர் நகராட்சி, தாந்தோணி நகராட்சி மற்றும் சணப்பிரட்டி பஞ்சாயத்து நகராட்சியுடன் ஒருங்கிணைக்கப்பட்டு பெருநகராட்சியாக செயல்பட்டு வருகிறது. எனவே, இந்நகராட்சியில் அலுவலக நிரந்தர முன்பணமாக ஏற்கனவே ரூ.**2,000/–** மன்ற தீர்மான எண்.**710**, நாள்.**30.07.2012**ல் அனுமதிக்கப் பட்டுள்ளது. மேலும் இந்நகராட்சியில் பொதுப்பிரிவு, பொறியாளர் பிரிவு, நகரமைப்பு பிரிவு, வருவாய் பிரிவு மற்றும் பொதுசுகாதாரப் பிரிவுகள் ஆகும். இதில் அவசர அவசியத்தைக் கருதி

செலவினங்கள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் தலா பிரிவு ரூ.1000x5 வீதம் ரூ.5,000/—ற்கு நிரந்தர முன்பணமாக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** அனுமதிக்கலாம். (பி7/9326/2018)

தீர்மான எண்.1033 அனுமதிக்கப்பட்டது.

35)கரூர் நகராட்சியுடன் தாந்தோணி நகராட்சி, இனாம்கரூர் நகராட்சி, சணப்பிரட்டி ஆகியவைகள் 25.10.2011ல் இணைக்கப்பட்டு தற்போது பெருநகராட்சியாக இயங்கி வருகிறது. எனவே, அவ்வாறு இயங்கி வருவதால் தபால்கள் அதிகமாக வெளியூர்களுக்கும், உள்ளூர்களுக்கும் அனுப்ப வேண்டியுள்ளதால் தபால் வில்லைகள் அடிக்கடி தீர்ந்து போய்விடுகிறது. அவசர அவசியத்தைக் கருதி சில முக்கியமான தபால்கள் அனுப்பும் நேரத்தில் தபால் வில்லைகள் இருப்பு இல்லாமல் போய்விடுகிறது. எனவே, அவசர அவசியத்தைக் கருதி ரூ.3,000/— வாங்குவதை அதிகப்படுத்தி ரூ.5,000/— மட்டும் வாங்கிக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** அனுமதிக்கலாம். (சி6/2000/2015)

தீர்மான எண்.1034 அனுமதிக்கப்பட்டது.

36) கரூர் நகராட்சி பொது சுகாதார பிரிவு டம்பர் பிளேசர் வாகன எண் TN47 AD6282க்கு கிளட்சு மற்றும் பிற பழுதுகள் நீக்கம் செய்ய 28.09.2017அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு

"கிளட்சு மற்றும் பிற பழுதுகள் நீக்கும் பணிகள்"

| | | |
|---|---|---|
| 1. | SRI BAGAYALASHMI MOTOR WORKS ERODE | Rs.21000 |
| 2. | GAYATHRI MANIMAKKELAI MOTOR WORKS | Rs.22000 |
| 3. | SRI MURUGAN AUTO WORKS | Rs.23000 |

மேற்படி "கிளட்சு மற்றும் பிற பழுதுகள் நீக்கும் பணிகள்" பணிக்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள SRI BAGAYALASHMI MOTOR WORKS, ERODE நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கவும் இதற்குண்டான உத்தேச செலவு தொகை ரூ.21000/— மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1)கரூர் நகராட்சி பொது சுகாதார பிரிவு டம்பர் பிளேசர் வாகன எண் TN47 AD6282க்கு கிளட்சு மற்றும் பிற பழுதுகள் நீக்கம் செய்ய குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Sri Bagayalashmi Motor Works Erode நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கவும் இதற்குண்டான செலவு தொகை ரூ.21000/—க்கு மன்றம் அனுமதிக்கலாம்.

2)பொது சுகாதார பிரிவு டம்பர் பிளேசர் வாகனத்தின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்கள் அனுமுதி பெற்று கிளட்சு பணிகள் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

3)மேற்படி வண்டிக்கு அரசின் உச்சவரம்பு தொகையைவிட கூடுதல் தொகைக்கு அரசின் பின்னேற்பு பெற மன்றம் அனுமதிக்கலாம்.

4)பொது நிதியிலிருந்து பட்டியல் தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (8327/2017/H1)

தீர்மான எண்.1035 அனுமதிக்கப்பட்டது.

37)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.43, 44, 40, 39, 45, 48 ஆகிய தாந்தோணி பகுதிகளுக்கு குடிநீர் அல்லாத பிற பயன்பாட்டிற்கு பயன்படுத்தி வருவதினால் ஆழ்துளை கிணறுகளில் தண்ணீர் எடுக்க இயலாமல் மிகுந்த சிரமப்படுவதாகவும், மின்மோட்டார் பழுதானதை உடன் மாற்றி தண்ணீர் கிடைக்க ஆவண செய்யுமாறு நேரில் வந்து புகார்கள் தெரிவித்துள்ளதாலும், பழுதினை சரிசெய்ய கோரியுள்ளதின் அடிப்படையில் குடிநீர் விநியோக பணியின் அத்தியாவசிய அவசியத்தினை கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.6.90இலட்சத்திற்கு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|
| 1 | மல்லிகா இன்ஜினியரிங் கான்ட்ரக்டர், கரூர் | 0.91% |
| 2 | நவலடியான் எலக்ட்ரிக்கல் & ரீவைண்டிங் வோர்க், கரூர் | 0.62% |
| 3 | சிவசக்தி இன்ஜினியரிங் வோர்க், கரூர் | 0.78% |

**அலுவலகக் குறிப்பு**

**1)**மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**2)**மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் **1920** விதி எண்.**15**ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள மல்லிகா இன்ஜினியரிங் கான்ட்ரக்டர், கரூர் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்க பணியினை செய்து முடித்த செலவினத் தொகை ரூ.**6,84,795/–**யை நகராட்சி குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். **(இ3/5667/2018)**

தீர்மான எண்.**1036** பதிவு செய்யப்பட்டது.

**38)** கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**40, 42, 48, 38, 37, 44, 43** வரையுள்ள தாந்தோணி பகுதிகளில் ஆழ்துளை கிணறுகளில் மின்மோட்டார்களின் பழுதுகளை சரிசெய்ய இயலாததால் ஆழ்துளை கிணறுகளிலின மூலம் பயன்பெறும் பொதுமக்களின் தேவையினை உடன் பூர்த்தி செய்ய வேண்டியதின் அவசியத்தினை கருதி மேற்படி ஆழ்துளை கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள பழுதான மின்மோட்டார்களுக்கு பதில் புதிய மின்மோட்டார்களை பொருத்தி தண்ணீர் வசதி செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.**6.40**இலட்சத்திற்கு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் **15**ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.6.40இலட்சம்**

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|
| 1 | மல்லிகா இன்ஜினியரிங் கான்ட்ரக்டர், கரூர் | 0.91% |
| 2 | நவலடியான் எலக்ட்ரிக்கல் & ரீவைண்டிங் வோர்க், கரூர் | 0.88% |
| 3 | சிவசக்தி இன்ஜினியரிங் வோர்க், கரூர் | 1.83% |

**அலுவலகக் குறிப்பு**

**1)**மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**2)**மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் **1920** விதி எண்.**15**ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள மல்லிகா இன்ஜினியரிங் கான்ட்ரக்டர், கரூர் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்க பணியினை செய்து முடித்த செலவினத் தொகை ரூ.**6,36,057/–**யை நகராட்சி குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம். **(இ3/2018)**

தீர்மான எண்.**1037** பதிவு செய்யப்பட்டது.

**39)**இந்நகராட்சி அலுவலகம் கிழக்கு புறமுள்ள கட்டிடத்தில் இயங்கிவரும் பதிவறையில் கோப்புகள் மற்றும் பதிவேடுகள் பாதுகாக்க இரும்பு அலமாரிகள் கீழ்கண்ட விவரப்படி கொள்முதல் செய்வதற்கு டான்சி நிறுவனத்திடம் விலைப்பட்டியல் பெறப்பட்டதில் **3** இனவாரியாக **82** அலமாரிகளுக்கு டான்சி நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட விலைப்பட்டியலின்படி (டான்சி கடித எண்/**166(1)** எம்/**2018**, நாள்.**20.08.2018** ன்படி தொகை ரூ.**12,63,278/-**யை செலுத்த கோரியதின்படி மேற்படி தொகையினை டான்சி நிறுவனத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எ ண் | பொருளின் விவரம் | தேவைப்படும் எண்ணிக்கை | அடிப்படை விலை விவரம் டெலிவரி சார்ஜ் உட்பட ரூ. | ஒப்பந்தத்தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | <u>Steel Rack for closed type 3 sides close one side open of size:96”x36”x24”</u><br>Made out of 18 CR sheet, | **12** | **16345** | **1,96,140.00** |

| | | | | |
|---|---|---|---|---|
| | 40x40x6mm MS Angle, with one coat of Red Oxide and Two coat of Olive Green Enamel Paint Finish | | | |
| 2 | **Steel Rack for closed type 3 sides close one side open of size: 96"x36"x15"** Made out of 18G sheet 40x40x6 mm MS Angle with one coat of Red Oxide and Two coat of Olive Green Enamel Paint Finish | **64** | **112627** | **8.08.128.00** |
| 3 | **Steel Double Door Glass Cabinet of size 78"x36"x19" (TSCUB 006)** Made out of 20G, 16G, 14G CR sheet_4mm plain Glass having two Glass CR sheet framed Doors of 4 sgelves forming 5 compartment with one coat of Red Oxide and Two coat of Enamel Paint finish. | **6** | **11051** | **66.306.00** |

**அலுவலக குறிப்பு:**

**1)**அலுவலக உபயோகத்திற்கான மேற்படி தளவாடி பொருட்களை டான்சி நிறுவனம் மூலம் கொள்முதல் செய்து கொள்ளவும் அதற்கான தொகை ரூ.12,63,278/-யை நகராட்சி வருவாய் நிதியின் மூலம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**2)**மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர்(ம) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் தொகை ரூ.12,63,278/-யை டான்சி நிறுவனத்திற்கு செலுத்தியமைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம். (இ3/5072/2018)

தீர்மான எண்.1038 அங்கீகரிக்கப்பட்டது.

**40)**ஒருங்கிணைந்த கரூர் நகராட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் புதைவடிகால் திட்டத்தில் விடுபட்டுள்ள பகுதிகளுக்கும், இந்நகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள தாந்தோணி மற்றும் சணப்பிரட்டி பகுதிகளில் புதைவடிகால் திட்டம் செயல்படுத்தவும் அதற்காக விரிவான திட்ட அறிக்கை தயார் செய்வதற்கு தனியார் கலந்தாலோசக நிறுவனங்களை நியமனம் செய்து பணிகள் மேற்கொள்வதற்கும், மேலும் கரூர், இனாம்கரூர் மற்றும் தாந்தோணி, சணப்பிரட்டி பகுதிகளில் சீரான குடிநீர் விநியோகம் மேற்கொள்ள DMA Concept (District Metering Area) முறையில் மற்றும் சணப்பிரட்டி கூடுதல் குடிநீர் திட்டம் உட்பட விரிவான திட்ட அறிக்கை மேற்கொள்வதற்கும் TWIC நிறுவனத்திற்கு கோரப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் புதைவடிகால் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கையினையும் மற்றும் சீரான குடிநீர் விநியோகம் மேற்கொள்ள DMA Concept ல் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யவும், அதற்காகும் செலவினம் ரூ.65.00இலட்சத்திற்கும் + ஜி.எஸ்.டி., வேண்டி கடிதம் வரப்பெற்றுள்ளது.

எனவே, கரூர் மற்றும் இனாம்கரூர் பகுதிகளில் புதைவடிகால் திட்டம் மேற்கொள்வதற்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்திடவும், மேலும் கரூர் நகராட்சிப் பகுதிகள் முழுமைக்கும் சீரான குடிநீர் விநியோகம் செய்திட DMA Concept–ல் (District Metering Area) மேற்கொள்ள விரிவான திட்டக் கருத்துரு தயார் செய்யவும், அதற்கான செலவினத்தை Project Development Growth Fund (PDGF) அல்லது Project Preparatory (PPF) நிதி உதவி வழங்கிட வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். (இ1/2708/2018)

தீர்மான எண்.1039 அனுமதிக்கப்பட்டது.

**41)**கரூர் நகராட்சி நகரமைப்பு பிரிவில் ஜெராக்ஸ் மிஷின் 2011ம் வருடம் வாங்கப்பட்டு இதுவரை பயன்பாட்டில் இருந்து வருகிறது. தற்போது ஜெராக்ஸ் மிஷின் கடந்த இரண்டு வருடங்களாக அடிக்கடி பழுதடைந்து சரிசெய்யப்பட்டு வந்தது. இந்நிலையில் தற்போது சரிசெய்ய இயலாத

நிலையில் பழுதடைந்துவிட்டது. நகரமைப்பு பிரிவில் அனுமதியற்ற மனைப்பிரிவு முறைப்படுத்துதல் திட்டம், 40அடி அகல சாலை திட்டம், வார்டு மறுவரையறை மற்றும் பல்வேறு முக்கிய திட்டப்பணிகள் நடைபெறுவதால் ஜெராக்ஸ் நகல்கள் அதிகமாக எடுக்க வேண்டியுள்ளதால் புதிய ஜெராக்ஸ் மிஷின் வாங்க தோராய செலவினம் ரூ.2.00 இலட்சம் நகராட்சி பொது நிதியிலிருந்து வாங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

நகரமைப்பு பிரிவில் பல்வேறு முக்கிய திட்டப்பணிகள் நடைபெற்று வருதால் ஜெராக்ஸ் அதிகமாக எடுக்க வேண்டியுள்ளதால் புதிய ஜெராக்ஸ் மிஷின் வாங்க தோராய செலவினம் ரூ.2.00 இலட்சம் நகராட்சி பொது நிதியிலிருந்து வாங்கிட மன்றம் அனுமதிக்கலாம். (எப்1/ 8586/2018)

தீர்மான எண்.1040 அனுமதிக்கப்பட்டது.

42)கரூர் நகராட்சிக்கு உட்பட்ட 17வது வார்டில் வடக்கு பிரதட்சணம் தெருவில் பாதாள சாக்கடை திட்டத்தின்கீழ் இணைப்புக்கான பணிகள் நடைபெற்ற போது சிமெண்ட் கான்கிரிட் சாலை பழுதடைந்துள்ளதால் பொதுமக்களின் நலன் கருதி இச்சாலையை சீரமைக்க வேண்டி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2,50,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்காணும் செலவினத் தொகை ரூ.2,50,000/—ம் நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும், மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி செய்து முடிக்க மன்றம் அங்கீகரிக்கலாம். (இ1/9503/2018)

தீர்மான எண்.1041 அங்கீகரிக்கப்பட்டது.

43)இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் திடக்கழிவுகளை கையாளும் பணிக்கு மெஷனரிகளை இயக்க தமிழ்நாடு மின்வாரியத்தின் மூலம் அமைக்கப்பட உள்ள புதிய பகிர்மானத்தில் இருந்து மின்இணைப்பு பெறுவதற்கு தேவையான Busbar arrangements, Panel Board, Automatic power factor controller போன்ற பணிகள் நகராட்சி மூலம் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்படி இணைப்பு பெறுவதற்கான பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணிக்கான தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00இலட்சம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் மொத்த மதிப்பீட்டில் கிடைக்கப்பெறும் சேமிப்புத் தொகையின் மூலம் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

3)மேற்கண்ட பணி முடிவுற்ற பின்னர் கூடுதல் பணிக்கான ஒப்புதலையும் முடிவு அறிக்கையுடன் சேர்த்து தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களிடம் ஒப்புதல் பெறவும் மன்றம் அங்கீகரிக்கலாம். (இ1/9560/2018)

தீர்மான எண்.1042 அங்கீகரிக்கப்பட்டது.

44)இந்நகராட்சியில் 2015-2016ஆம் ஆண்டிற்கான உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதி திட்டத்தின் கீழ் ரூ.670.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து அரசு ஆணை எண்.56 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை 28.01.2018ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| இரயில்வே துறையின் மூலம் இரயில் இருப்பு பாதைக்கு கீழ் சுரங்கப் பாதை அமைத்தல் | மதிப்பீடு ரு.360.06 இலட்சம் |
| நகராட்சி மூலம் சுரங்கப்பாதைக்கான அணுகு சாலை அமைத்தல் (மின்கம்பம் மற்றும் மின்பாதை மாற்றி அமைத்தல் ரூ.197.00 இலட்சம்) | மதிப்பீடு ரூ.193.94 இலட்சம் |

மேற்படி நிதி ஒதுக்கீட்டில் இரயில்வே துறையின் மூலம் இரயில் இரும்பு பாதைக்கு கீழ்சுரங்க வழி பாதை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. சுரங்க வழி பாதைக்கான

அணுகு சாலை அமைக்கும் பணியினை நகராட்சி மூலம் மேற்கொள்ளப்பட்டு பணியினை மேற்கொள்ள 04.01.2017 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் M/s.KPD காண்ட்ராக்டர், கரூர் என்பவரது 4.98% சதவீதம் கூடுதல் மதிப்பீட்டு தொகைக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று இவ்வலுவலக செயல்முறை கடித ந.க.எண்.873/2013/இ1, நாள்.30.01.2017ன்படி வேலை உத்திரவு வழங்கப்பட்டது.

மேற்படி அணுகு சாலை அமைக்கும் பணியினை மேற்கொண்டு மதிப்பீட்டில் வழிவகை செய்துள்ள அணுகு சாலைக்கு இருபுறமும் தடுப்பு சுவர் அமைக்கும் பணியினை பெரியார் மணியம்மை பொறியியல் கல்லூரி தஞ்சாவூரில் பெறப்பட்ட கட்டுமான வடிவமைப்பின்படி (Structural design) தடுப்பு சுவர் அமைக்கும் பணியினை மேற்கொள்ளப்பட்டதில் இரயில்வே துறையினரால் இரயில் இருப்பு பாதையொட்டி தென்புறப்பகுதியில் சுமார் 11 மீட்டர் நீளத்திற்கு இருபுறமும் தடுப்பு சுவர் அமைக்கும் பணியில் தடுப்பு சுவரின் உயரம் மதிப்பீடு தயார் செய்ய பெறப்பட்ட கட்டுமான வடிவமைப்பில் குறிப்பிட்டுள்ள தடுப்பு சுவர் உயரத்தினை விட கூடுதலாக கட்ட வேண்டியுள்ளதால் தடுப்பு சுவர் உயரம் கூடுதலாக கட்டும் கட்டுமான பணிக்கு ஏற்ப பெரியார் மணியம்மை பொறியியல் கல்லூரியில் பெறப்பட்ட கட்டுமான வடிவமைப்பின்படி கட்டுமான பணியினை மேற்கொள்வதினால் ஏற்படும் கூடுதல் அளவுகள் மற்றும் கூடுதல் செலவினத்திற்கும், அணுகு சாலையின் இருபுறமும் பாதை அமைக்கும் பணிக்கு மதிப்பீட்டில் தார் தள சாலையாக அமைக்க மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், அணுகு சாலை அமைக்கும் பாதையின் மண்ணின் உறுதிதன்மைக்கேற்ப சாலை அமைக்க மண் மாதிரிகளை எடுத்து IRTT பொறியியல் கல்லூரி ஈரோட்டில் ஆய்வு செய்து பெறப்பட்ட ஆய்வறிக்கையின்படி மண்ணின் உறுதித்தன்மை குறைவாக இருப்பதால் (CBR Value)மதிப்பீட்டின்படி தார்தளம் அமைப்பது விட வலுவான சிமெண்ட் தளம் அமைப்பது சிறந்தது என ஆய்வறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அணுகு சாலையின் இருபுறமும் சாய்தளபாதையாக இருப்பதால் தார் சாலை அமைப்பதினால் மழைக்காலங்களில் தார் சாலை எளிதில் சேதமடைந்து விட வாய்ப்புள்ளதாலும், தார் சாலையினை காலமுறைப்படி பாராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால் தார் சாலை அமைக்கும் பணிக்கு பதில் பணியின் அவசியம் கருதி சிமெண்ட கான்கீரிட் சாலையாக அமைக்கவும் அதற்கான கட்டுமான பணிக்கு பெரியார் மணியம்மை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் பெறப்பட்ட கட்டுமான வடிவமைப்பின்படி கட்டுமான பணிகளை மேற்கொள்ள ஏற்படும் கூடுதல் அளவுகள், கூடுதல் இனம் மற்றும் கூடுதல் தொகையின்படி பணியினை மேற்கொள்ள தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ஒப்புதலை பெற்று பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணிக்கான அசல் மதிப்பீட்டில் அணுகு சாலை பாதையினை தார் சாலையாக அமைக்க வழிவகை செய்யப்பட்டதில் மண்ணின் உறுதித்தன்மைக்கேற்ப சிமெண்ட் கான்கீரிட் தளமாக மாற்றி அமைக்கும் பணியினை மேற்கொள்ளவும் அதற்காக ஏற்படும் கூடுதல் அளவுகள், கூடுதல் இனம் மற்றும் கூடுதல் தொகையின் தயார் செய்த ஓர்க்ஸில்ப் மற்றும் டேடாவிற்கு தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ஒப்புதலை பெற்று பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ1/873/2013)

தீர்மான எண்.1043 அனுமதிக்கப்பட்டது.

45)கரூர் நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் பாதாள சாக்கடைதிட்டத்தில் இராஜாஜி சாலையில் எல்.என்.வி.என் பள்ளி எதிர்புறம் முதல் டாக்டர் லோகநாதன் வீடு வரை அமைக்கப்பட்டுள்ள நகராட்சிக்கு சொந்தமான பாதாள சாக்கடை ஆய்வுக்குழி எண்.54 முதல் 55க்கு இடையில் ஏற்பட்டுள்ள பள்ளம் மற்றும் 35 மீட்டர் நீளம் சேதமடைந்த 800 மி.மீ விட்டமுள்ள ஆர்.சி.சி கழிவு நீர் குழாய்களில் உடைப்பு ஏற்பட்டு உட்பகுதி மண் சரிந்தும் அடைப்பு ஏற்பட்டுள்ளது. மேலும் கழிவு நீரினால் மேற்பரப்பு மண் மேலும் சரிந்து சாலையில் பெரும்பள்ளம் ஏற்பட்டுள்ளது. பிரதான சாலையில் ஏற்பட்டுள்ள குழாய் உடைப்பை சரி செய்ய வேண்டியது அவசர அவசியமாகிறது. பொதுமக்களின் பொதுசுகாதார நலன் கருதியும் வாகன போக்குவரத்தினை சீர் படுத்தும் வகையினும் பழுதடைந்த 35.00 நீளம், 800 மி.மீ விட்டமுள்ள RCC குழய்களை மாற்றிடவும், அதற்கான தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு செலவினம் ரூ.12.60 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டின் படி பணியினை உடன் செய்து முடிக்க வேண்டியும், பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் அனுமதித்து கீழ்காணும் விபரப்படி விலைப்புள்ளிகள் பெற்று குறைந்த விலைப்புள்ளிதாரர் V.Subbiah, Vadapalani என்பவர் மூலம் பணியினை செய்து

முடித்து நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.12.60 இலட்சம்**

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1) | V.Subbiah, Vadapalani | 0.16% குறைவு |
| 2) | PRG Construction, Karur | 1.13 % அதிகம் |
| 3) | RPS Construction, Karur | 1.74% அதிகம்/ |

**அலுவலக குறிப்பு:**

1 மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

2 மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் அனுமதித்தது விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்து V.Subbiah, Vadapalani நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டு 12,19,338/- செலவினத்தில் பணியினை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொண்டதற்கும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம். (இ5/3321/2018)

தீர்மான எண்.1044 பதிவு செய்யப்பட்டது.

46)கரூர் நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் பாதாள சாக்கடைதிட்டத்தில் அண்ணா வளைவு அருகில் உள்ள சாலையின் நடுவே பதிக்கப்பட்டுள்ள மனித ஆய்வுக்குழி எண். 55 முதல் 56 வரை புதைவடிகாலில் 800 எம்.எம்.RCC பைப் ஆலமரத்தெரு சந்திப்பு முதல் மேல்புறமாக வாசன் மருந்துக்கடை வரை பெரும் பள்ளம் ஏற்பட்டு புதைவடிகால் திட்டத்தில் பதிக்கப்பட்டுள்ள RCC பைப் பழுதடைந்துள்ளது. மேலும் பெரும் பள்ளம் ஏற்பட்டு சாலையில் எந்நேரமும் சாலையில் மீண்டும் மீண்டும் பள்ளம் ஏற்பட்டு விபத்து ஏற்படும் நிலையில் அச்சாலையில் எவ்வித போக்குவரத்து செல்ல இயலாமல் பொருமக்கள் பெரிதும் சிரமமப்படுகிறார்கள். எனவே மேற்படி சாலையில் பள்ளம் ஏற்பட்டு பழுதான பகுதியினை சீர் செய்து பதிக்கப்பட்டுள்ள 800 எம்.எம். ஆர்.சி.சி குழாயினை சுமார் 40 மீ நீளத்திற்கு உடனடியாக மாற்ற வேண்டியது அவசியமானதாகவும், பொதுமக்களின் நலன் கருதியும், பெரும் பள்ளம் ஏற்பட்ட பகுதியினை எவ்வித விபத்தும் ஏற்படாத வகையில் பணியினை உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால், அதற்கான தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு செலவினம் ரூ.15.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டின்படி பணியினை உடன் செய்து முடிக்க வேண்டியும், பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் அனுமதித்து கீழ்காணும் விபரப்படி விலைப்புள்ளிகள் பெற்று குறைந்த விலைப்புள்ளிதாரார் **V.Subbiah, Vadapalani** என்பவர் மூலம் பணியினை செய்து முடித்து நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.15.00 இலட்சம்**

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1) | V.Subbiah, Vadapalani | 0.17% குறைவு |
| 2) | PRG Construction, Karur | 1.13 % அதிகம் |
| 3) | RPS Construction, Karur | 1.73% அதிகம்/ |

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

2 மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் அனுமதித்தது விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்து V.Subbiah, Vadapalani நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டு ரூ.14,40,067/- செலவினத்தில் பணியினை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொண்டதற்கும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம். (இ5/412/2018)

தீர்மான எண்.1045 பதிவு செய்யப்பட்டது.

47)கரூர் நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் பாதாள சாக்கடைதிட்டத்தில் புகளூம் மேம்பாலம் நுழைவு பகுதி மற்றும் இரத்தினம் சாலை சந்திப்பில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான பாதாள சாக்கடை ஆய்வுக்குழி எண்.23 முதல் 24க்கு இடையில் ஏற்பட்டுள்ள பள்ளம் மற்றும் 30 மீட்டர் நீளம் சேதமடைந்த 800 மி.மீ விட்டமுள்ள ஆர்.சி.சி கழிவு நீர் குழாய்களில் உடைப்பு ஏற்பட்டு உட்பகுதி மண் சரிந்தும் அடைப்பு ஏற்பட்டுள்ளது. மேலும் கழிவு நீரினால் மேற்பரப்பு மண் மேலும் சரிந்து சாலையில் பெரும்பள்ளம் ஏற்பட்டுள்ளது. பிரதான சாலையில் ஏற்பட்டுள்ள குழாய் உடைப்பை சரி செய்ய வேண்டியது அவசர அவசியமாகிறது. பொதுமக்களின் பொதுசுகாதார நலன் கருதியும் வாகன போக்குவரத்தினை சீர் படுத்தும் வகையினும் பழுதடைந்த 30.00 நீளம், 800 மி.மீ விட்டமுள்ள RCC குழய்களை மாற்றிடவும், அதற்கான தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு செலவினம் ரூ.7.10 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டின் படி பணியினை உடன் செய்து முடிக்க வேண்டியும், பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் அனுமதித்து கீழ்காணும் விபரப்படி விலைப்புள்ளிகள் பெற்று குறைந்த விலைப்புள்ளிதாரர் V.Subbiah, Vadapalani என்பவர் மூலம் பணியினை செய்து முடித்து நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.7.10 இலட்சம்**

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1) | V.Subbiah, Vadapalani | 0.11% குறைவு |
| 2) | PRG Construction, Karur | 1.05 % அதிகம் |
| 3) | RPS Construction, Karur | 1.79% அதிகம்/ |

**அலுவலக குறிப்பு:**

1 மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

2 மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் அனுமதித்தது விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்து **V.Subbiah, Vadapalani** நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டு 6,92,252/- செலவினத்தில் பணியினை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொண்டதற்கும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம். (இ5/2514/2018)

தீர்மான எண்.1046 பதிவு செய்யப்பட்டது.

48)கரூர் நகராட்சியில் உள்ள 48 வார்டு பகுதிகளில் 67428 குடியிருப்புகளின் தற்போதைய மக்கள் தொகை 2,24,378ன்படி தினசரி சேகரம் செய்யப்பட்டுவரும் 99.00டன் குப்பைகளை வாங்கல் சாலையில் சர்வே எண்.974,976ல் 13.68 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள உரக்கிடங்கில் சேகரம் செய்யப்பட்டு வருகிறது. கடந்த 35 வருடங்களாக உரக்கிடங்கில் சேகரம் செய்து வைக்கப்பட்டுள்ள குப்பைகளை அவ்வப்போது அடையாளம் தெரியாத நபர்களால் தீ வைக்கப் படுவதால், அதனால் ஏற்படும் அதிக அளவு புகையினால் அப்பகுதி பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் மிகுந்த பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. பொதுமக்களின் பொது சுகாதார நலன் கருதி கடந்த 35 வருடங்களாக சேகரிப்பப்பட்டுள்ள குப்பைகளை Bio mining செய்து நிலத்தினை மீட்டெடுக்க வேண்டியது அவசியமாகிறது. சேகரம் செய்யப்பட்டுள்ள குப்பைகளை Tachometric survey செய்து அளவீடு செய்யப்பட்டதில் 1,41,713 கனமீட்டர் அளவில் உள்ளது.

Biomining முறையில் பழைய குப்பைகளை அப்புறப்படுத்துவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட விலை விபரத்தின்படி மேற்கொள்வதற்கு ரூ.933.00இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது. 13.08.2018ல் நடைபெற்ற 7வது உயர்நிலை திட்டக்குழுவின் கூட்டத்தில் இந்நகராட்சிக்கு ரூ.933.00 இலட்சம் மதிப்பீட்டில் Bio mining செய்வதற்கான மதிப்பீட்டிற்கு Principal approval வழங்கப்பட்டு உள்ளது. இப்பணிக்கான நிதி பங்களிப்பு பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

| **மத்திய அரசு பங்கு** | **மாநில அரசு பங்கு** | **நகராட்சி பங்கு** | **மொத்த மதிப்பீட்டுத் தொகை** |
|---|---|---|---|
| 35% | 55% | 10% | 100% |

மேற்கண்ட நிதி ஒதுக்கீட்டின்படி நகராட்சி பங்களிப்புத் தொகையினை நகராட்சி பொதுநிதியின் மூலம் மேற்கொள்ளும் வகையில் உரிய நிர்வாக அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்களை சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.22866/பி3/2018, நாள்.23.08.2018ன்படி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் பணிகளை கொள்ள Principal approval வழங்கப்பட்டதின் அடிப்படையில் உரக்கிடங்கில் உள்ள பழைய குப்பைகளை Bio mining முறையில் அப்புறப்படுத்தும் பணிக்கான மதிப்பீடு தொகை ரூ.933.00இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெற கருத்துருக்களை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம். மேலும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் ஏற்கனவே அமைக்கப்பட்ட Processing Plant Bio mining Processக்கு பயன்படுத்தும் விதமான திட்ட மதிப்பில் உரிய ஏற்பாடுகளை அனுப்ப அனுமதிக்கலாம்.

(இ1/4804/2018)

தீர்மான எண்.1047 அனுமதிக்கப்பட்டது.

49)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15 முதல் 32 வரையுள்ள பகுதிகளில் ஆழ்துளை கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள சிறுமின் விசை பம்புகள் அப்பகுதி பொதுமக்கள் குடிநீர் அல்லாத பிற பயன்பாட்டிற்கு பெரிதும் பயன்படுத்தி வருவதினால், அன்றாட பணிகளுக்கு ஆழ்துளை கிணறுகளின் நீரையே நம்பி உள்ளதால் பழுதான மின்மோட்டார்களை மீண்டும் பழுது பார்த்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது எனவும், பழுதான மின்மோட்டார்களுக்கு பதில் புதிய மின்மோட்டார்கள் பொருத்தலாம் என மின்கம்பியாளர்கள் குறிப்பு வழங்கியுள்ளதால் மேற்படி ஆழ்துளை கிணறுகளின் பழுதுகளை உடன் சரிசெய்து பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டி புதிய மின்மோட்டார்களை கொள்முதல் செய்து பழுது நீக்கம் செய்யும் பணிகளுக்கு ரூ.4.00இலட்சம் மதிப்பீட்டின்படி பணியினை உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் குடிநீர் விநியோகப் பணியின் அத்தியாவசிய அவசியத்தை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டம் 15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் குறைவான தொகையுடைய PRG கன்ஸ்ட்ரக்சன் கரூர் என்பவரது விலைப்புள்ளியினை ஏற்று பணி ஆணை வழங்கி பணியினை செய்து முடித்து செலவினம் ரூ.3,90,919// குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டதையும் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**வேலையின் மதிப்பீட்டுத் தொகை**

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|
| 1 | PRG Construction, Karur | 0.10% குறைவு |
| 2 | Piper and Cables, Karur | 1.06% கூடுதல் |
| 3 | R.Thangavel, Karur | 2.3% கூடுதல் |

**அலுவலகக் குறிப்பு**

1)மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

2)மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 விதி எண்.15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று பணி செய்து முடித்தமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம். (இ3/7522/2018)

தீர்மான எண்.1048 பதிவு செய்யப்பட்டது.

50)காங்கேயம் நகராட்சியில் அலுவலக உதவியாளராக பணிபுரியும் திரு.பா.நல்லசாமி என்பவர் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக கரூர் நகராட்சிக்கு பணியிட மாறுதல் செய்துக்கொள்ள அனுமதிக் கோரியுள்ளார். எனவே, திரு.பா.நல்லசாமி அலுவலக உதவியாளர் கோரியுள்ள கரூர் நகராட்சிக்கு பணி மாறுதல் செய்வது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம். (8727/2018/சி1)

தீர்மான எண்.1049 அனுமதிக்கப்பட்டது.

51)இந்நகராட்சியில் 2011–2012, 2012–2013, 2013–2014, 2014–2015 ஆகிய ஆண்டுகளில் திரு.எம்.பிரபாகரன் என்பவர் ஒப்பந்த பணிகளை செய்து முடித்து பட்டியல் தொகை பெற்றுள்ளதால் தற்போது மேற்காணும் வருடங்களில் செய்து முடித்த பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம்

செய்யப்பட்ட வைப்புத் தொகை மற்றும் கூடுதல் வைப்புத் தொகையினை திரும்ப வழங்கக் கோரி விண்ணப்பித்துள்ளார். மேலும் ஒப்பந்ததாரர் கோரிய வைப்புத் தொகை மூன்றாண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதால் காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேடு தொகுப்பு–IIல் கீழ்க்கண்டுள்ள விவரப்படி தொகை நிலுவையாக உள்ளது.

| வ.எண் | காலம் கடந்த வைப்புத் தொகை விவரம் | | | தொகை |
|---|---|---|---|---|
| | பதிவேடு | பக்கம் எண் | வருடம் | |
| 1 | தொகுப்பு–II | 10 | 2012–2013 | 8000 |
| 2 | தொகுப்பு | 16 | 2012–2013 | 16603 |
| 3 | தொகுப்பு | 56 | 2013–2014 | 40000 |
| 4 | தொகுப்பு | 65 | 2013–2014 | 18000 |
| 5 | தொகுப்பு | 66 | 2013–2014 | 18000 |
| 6 | தொகுப்பு | 71 | 2013–2014 | 15000 |
| 7 | தொகுப்பு | 93 | 2013–2014 | 17000 |
| | | | மொத்தம் | 132603 |

மேற்கண்டுள்ள தொகை ரூ.1,32,603/– காலங்கடந்த வைப்புத் தொகையில் உள்ளதை திரு.எம்.பிரபாகரன் ஒப்பந்ததாரருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி தொகையினை வைப்புத் தொகை கணக்கிலிருந்து வழங்கலாம்.

தீர்மான எண்.1050 அனுமதிக்கப்பட்டது.

52)கரூர் நகராட்சி பகுதிகளில் உள்ள 48 வார்டுகளிலும் 67428 குடியிருப்புகள் உள்ளன. எதிர்வரும் வடகிழக்கு பருவமழை காலத்தினை முன்னிட்டு டெங்கு மற்றும் கொசுக்கள் மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை தீவிரப்படுத்துமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஆய்வுக் கூட்ட நடவடிக்கைகள் ந.க.எண்.2571/17/ஜே1 நாள்.23.04.2018ன்படி ஒவ்வொரு 300 குடியிருப்புகளுக்கும் ஒரு கொசு ஒழிப்பு பணியாளர் (DBC) வீதம் 225 DBC பணியாளர்கள் தற்காலிகமாக மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்ணயம் செய்துள்ள தினக்கூலி அடிப்படையில் ஒப்பந்ததாரர் மூலம் பணியமர்த்தி கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. மேலும் இவ்வலுவலக ந.க.எண்.8466/2017/எச்1 நாள்.05.01.2018 மற்றும் 24.05.2018ல் ஏற்கனவே தேவையின் அடிப்படையில் 65 கொசு ஒழிப்பு பணியாளர்கள் பணி செய்து வருகின்றனர். தற்போது மீதி தேவையாகயுள்ள 160 DBC பணியாளர்களை 01.08.2018 தேதி முதல் தேவையின் அடிப்படையில் ஏற்கனவே வழங்கி வரும் ரிலையான் பெசிலிட்டி சர்வீசஸ் நிறுவனம் மூலம் 2017–2018ம் ஆண்டின் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தினசரி விலை விகிதப்படி தொகை வழங்கி பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம்.

3)பொதுசுகாதார அவசர அவசியம் மற்றும் பணியின் முக்கியத்துவத்தை கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம். (எச்1/2018)

தீர்மான எண்.1051 அனுமதிக்கப்பட்டது.

53)இந்நகராட்சி வருவாய் பிரிவில் 2017–2018ம் ஆண்டு கணக்குகள் முடிக்கும்பொருட்டு 2017–2018ம் ஆண்டுக்கான சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம், பாதாள சாக்கடை இணைப்பு மற்றும் வரியற்ற இனங்கள் நடப்பு மற்றும் நிலுவை கேட்பு பதிவேடுகள் தயார் செய்யும் A3 பேப்பரில் பிரிண்ட் எடுக்கும் பணியினை உள்ளூர் வெளி நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் கோரி பெற்று பிரிண்ட் எடுக்கும் பணி மேற்கொள்ளவும், மேற்படி 2014–2015, 2015–2016 மற்றும் 2016–2017ம் ஆண்டுகளுக்கு வெளி நிறுவனத்தில் விலைப்புள்ளி பெற்று பணிகள் முடிக்கப்பட்டு அதற்கான தொகை வழங்கப்படாமல் நிலுவையாக உள்ளது.

மேற்படி நிலுவைத் தொகை வழங்கவும், நடப்பு ஆண்டிற்கான செலவினத் தொகை வழங்கவும் உத்தேச செலவினம் ரூ.1,60,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** அனுமதிக்கலாம். (அ1/10617/2018)

தீர்மான எண்.1052 அனுமதிக்கப்பட்டது.

54)இந்நகராட்சி ஆண்டு கணக்குகள் 2017–2018ம் ஆண்டு தணிக்கைக்கு வருவாய் பிரிவு, சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம், வரியற்ற இனங்கள், பாதாள சாக்கடை திட்ட நடப்பு மற்றும் நிலுவை கேட்பு பதிவேடுகள் கணிணி மூலம் பிரிண்ட் செய்து பதிவேடுகள் தயார் செய்யும் பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் / முகவரி | A3 தாள் இல்லாமல் பக்கம் ஒன்றுக்கு | A3 தாள் உடன் பக்கம் ஒன்றுக்கு |
|---|---|---|---|
| 1 | கம்ப்யூட்டர் பார்க்<br>88/11 NRMP Street<br>கரூர் | ரூ.2.40 | ரூ.3.60 |
| 2 | யுனிக்யூ மைக்ரோ<br>கம்ப்யூட்டர்ஸ் கரூர்<br>51/3, கரூர் மெயின் ரோடு,<br>வேலாயுதம்பாளையம், கரூர் | ரூ.3.00 | ரூ.4.00 |
| 3 | லைட்ன் கம்ப்யூட்டர்ஸ்<br>171, ஜவஹர் பஜார்<br>கரூர் | ரூ.3.10 | ரூ.4.10 |

மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்ட கம்ப்யூட்டர் பார்க் நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி ஒப்படைத்தடைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம். (அ1/10617/2018)

தீர்மான எண்.1053 அனுமதிக்கப்பட்டது.

55)கரூர் நகராட்சிக்குட்பட்ட தாந்தோணி பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு கல்யாண வெங்கட்ரமணசுவாமி ஆலய புரட்டாசி திருவிழாவின்போது நகராட்சியால் செய்யப்பட வேண்டிய சுகாதாரப் பணிகள், குடிநீர் வசதிகள் மற்றும் மின்விளக்கு வசதிகள் செய்வதற்கும் ஏற்படும் செலவினத்தை ஈடு செய்யும் வகையில் மேற்கண்ட திருவிழா காலத்தின் போது (13.09.2018 முதல் 13.10.2018 முடிய) கோவிலில் நிர்ணயிக்கும் தேதிகளில் தாந்தோணி மலையினை சுற்றிலும் உள்ள வீதிகளில் வைக்கப்படும் தற்காலிக கடைகளுக்கும், நாலாவிதமான கடைகளுக்கும் சுங்கம் வசூலிக்கும் உரிமத்திற்கும், மேற்படி காலங்களில் மைக்செட் வைத்து அதன் மூலம் விளம்பரம் செய்து கொள்ளும் உரிமத்திற்கும் பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | உரிய இனங்களின் விவரம் | பொறுப்புத் தொகை |
|---|---|---|
| 1 | 13.09.2018 முதல் 13.10.2018 முடிய உள்ள காலங்களில் தாந்தோன்றிமலை ஸ்ரீவெங்கட்ரமணசுவாமி ஆலய புரட்டாசி திருவிழாவை முன்னிட்டு தாந்தோணி மலையை சுற்றிலும் உள்ள வீதிகளில் வைக்கப்படும் தற்காலிக கடைகளுக்கும், நாலாவிதமான கடைகளுக்கும் சுங்கம் வசூலிக்கும் உரிமம் | ரூ.1,00,000/– |
| 2 | மேற்படி காலங்களில் மைக்செட் வைத்து அதன் மூலம் விளம்பரம் செய்து கொள்ளும் உரிமம் (வியாபார ரீதியான விளம்பரங்கள் மட்டும்) | ரூ.5,000/– |

**அலுவலகக் குறிப்பு**
1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2)மேற்கண்ட குத்தகை இனத்திற்கு ஏல பொதுகட்டுப்பாடு , தனிக்கட்டுப்பாடு மற்றும் சிறப்பு

கட்டுப்பாடுகளுக்கு பொருந்தும் என ஒப்புதல் அளிக்கலாம்.
**3)**மேற்கண்ட திருவிழா காலங்களில் வைக்கப்படும் சாலையோர கடைகளுக்கு நாள் ஒன்றுக்கு 4x5 அளவுள்ள கடைகளுக்கு கட்டணத் தொகை ரூ.**25/–** எனவும் அதற்குமேல் 10x4 அளவுள்ள கடைகளுக்கு கட்டணத் தொகை ரூ.**40/–** எனவும் (அதற்குமேல் அளவுகளில் கடை வைக்க அனுமதி இல்லை) என நிர்ணயம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
**4)** மேற்படி இனத்திற்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி தினசரி நாளிதழில் விளம்பரம் செய்ய ஆகும் உத்தேச செலவு ரூ.**25000/–**க்கு மன்றம் அனுமதி அளிக்கலாம். (அ**6/4723/2014)**

தீர்மான எண்.**1054** அனுமதிக்கப்பட்டது.

**56)**இந்நகராட்சிக்கு பாத்தியப்பட்ட ஆசாத் சாலை நகராட்சி அலுவலகத்திற்கு கிழக்கு பகுதியில் உள்ள வணிக வளாக கடை எண்.**7** (வரி விதிப்பு எண். **20000070)** திருமதி.ஆர்.லட்சுமி, க/பெ. கே.ராஜதுரை என்பவர் பெயரில் கடை உரிமம் பெற்று நடத்தி வந்துள்ளார்.

மேற்படியார் குடும்ப சூழ்நிலை காரணமாக மேற்படி கடையினை தொடர்ந்து சரிவர நடத்த இயலவில்லை ஆகையால் மேற்படி கடை வாடகை **31.07.2018** முடிய நிலுவையின்றி செலுத்த **01.08.2018** முதல் நகராட்சி வசம் ஒப்படைவு செய்துள்ளார்.

மேற்படி கடையினை நகராட்சி வசம் பெற்று நிதியிழப்பு ஏற்படா வண்ணம் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்கான விளம்பர கட்டணம் உள்ளிட்ட செலவினம் பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
1. அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி ஆணையர் / தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.
3 . மேற்படி பொது / ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர விளம்பர கட்டணம் உள்ளிட்ட செலவினங்கள் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (அ**1/8662/2018)**

தீர்மான எண்.**1055** அனுமதிக்கப்பட்டது.

**57)**கரூர் நகராட்சிக்குட்பட்ட இனாம்கரூர் பகுதி வார்டு எண்.**4** மற்றும் **5** பகுதி செங்குந்தபுரம் குறுக்கு தெருக்கள், மெயின் ரோடு, காமராஜபுரம் குறுக்கு தெருக்கள், மகாத்மா காந்தி சாலை மெயின் ரோடு, மகாத்மா காந்தி சாலை கிழக்கு பகுதி மற்றும் வடக்கு பகுதிகள் தற்போது பெய்ந்த மழையின் காரணமாக சாலை மிகவும் சேதமடைந்து வாகனங்கள் மற்றும் பொதுமக்கள் பயன்படுத்த முடியாத சூழ்நிலையில் இருப்பதால், மேற்படி சாலையினை சீரமைக்க மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் ஆய்வுக் கூட்டத்தில் தெரிவித்துள்ளதின்படி மேற்காணும் சாலையினை சீரமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.**6.10**இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
**1)**மன்றம் அனுமதிக்கலாம்.
**2)**மேற்படி பணிக்கான செலவினம் ரூ.**6.10**இலட்சத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (இ**1/2018)**

தீர்மான எண்.**1056** அனுமதிக்கப்பட்டது.

**58)**கரூர் நகராட்சிக்குட்பட்ட இனாம்கரூர் பகுதி வார்டு எண்.**3** எல்.ஜி.பி., நகர் மெயின் ரோா சாலை தற்போது பெய்ந்த மழையின் காரணமாக மிகவும் மோசமடைந்து பொதுமக்கள் காரணமாக மிகவும் மோசமடைந்து பொதுமக்கள் பயன்படுத்த முடியாத சூழ்நிலையில் இருப்பதால் பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் நேரடி அறிவுரையின்படி மேற்கண்ட சாலையினை சீரமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.**6.00**இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
**1)**மன்றம் அனுமதிக்கலாம்.

**2)**மேற்படி பணிக்கான செலவினம் ரூ.**6.00**இலட்சத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். **(இ1/2018)**

தீர்மான எண்.1057 அனுமதிக்கப்பட்டது.

**59)**கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**19** அண்ணா நகர் குறுக்கு சாலைகளில் தார் தளம் புதுப்பித்தல் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.**12,15,000/–**க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
**1)**மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றம்அனுமதி வழங்கலாம்.
**2)**செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். **(இ1/2018)**

தீர்மான எண்.1058 அனுமதிக்கப்பட்டது.

**60)**இந்நகராட்சிக்கு சொந்தமான முத்துக்குமாரசாமி பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சி பெட்டி வைத்து விளம்பரம் செய்து கொள்ளும் உரிமத்திற்கு **05.07.2018**ம் தேதியன்று நடைபெற்ற பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் திரு. பாண்டியன் என்பவர் உயர்ந்தப்பட்ச ஒப்பந்தப்புள்ளி ரூ.**59,000/–**க்கு கோரியதன் பேரில் இந்நகர்மன்ற தீர்மான எண்.**993** நாள்.**05.07.2018**ல் அங்கீகரிக்கப் பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்படி இனத்திற்கு திரு.கு.ஜெகன் என்பவர் ரூ.**65,000/–** (ஆண்டு ஒன்றுக்கு ) குத்தகை தொகை செலுத்துவதாகவும் தனக்கு இவ்வினத்தின் குத்தகை உரிமம் **2018–2019**ம் ஆண்டிற்கு வழங்க கோரியுள்ளார். அன்னாரது கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

மேற்படியார் கடிதத்தின்படி மேற்காணும் குத்தகை உரிமத்தை திரு. பாண்டியன் என்பவருக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள **05.07.2018**ம் நாளைய நகர்மன்ற தீர்மான எண்.**993** இரத்து செய்து மேற்படி இனத்திற்கும் மறுஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மேற்படி இனத்திற்கு திரு.கு.ஜெகன் என்பவர் அதிகபட்சமாக ரூ.**65,000/–**க்கு ஏற்றுக் கொள்ள சம்மதம் தெரிவித்துள்ளார்.

மேலும், மேற்படி இனத்திற்கு மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோருவதால் நகராட்சிக்கு கூடுதல் வருவாய் கிடைக்கும் என வருவாய் ஆய்வர் மற்றும் வருவாய் அலுவலர் குறிப்பில் தெரிவித்துள்ளார்கள்.

எனவே மேற்படி வருவாய் ஆய்வர்கள் மற்றும் வருவாய் அலுவலர் ஆகியோரின் குறிப்பினை ஏற்று இந்நகர்மன்றத்தின் **05.07.2018**ம் நாளைய தீர்மான எண்.**993** ஐ இரத்து செய்து மறு ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம். **(593/2018/அ6)**

தீர்மான எண்.1059 அனுமதிக்கப்பட்டது.

**61)**கரூர் நகராட்சிக்குட்பட்ட இனாம் கரூர் பகுதிகளான வார்டு எண்.**1** முதல் **14** வரை உள்ள பகுதிகளுக்கு நீருந்து நிலையங்களிலிருந்து பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்வதற்காக அமைக்கப்பட்ட 150mm/125mm/100mm மற்றும் **80**mmஆகிய டைப் கொண்ட சி.ஐ வால்வுகள் பழுதடைந்துள்ளதை மாற்றுவதற்கு தேவைப்படும் வால்வுகள் மற்றும் இதர உபகரணங்கள் புதிதாக சப்ளை செய்து பொருத்தி குடிநீர் விநியோகம் செய்யும் வகையில் சரி செய்து கொடுக்கும் பணியினை **ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில்** உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் குடிநீர் விநியோக பணியின் அத்தியாவசிய அவசியத்தினை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டம் **15**ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள **மல்லிகா இன்ஜீனியரிங் காண்ட்ராக்டர், கருர்** அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.**5.00** இலட்சத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1) | மல்லிகா இன்ஜீனியரிங் காண்ட்ராக்டர், கருர் | **0.11**% குறைவு |
| 2) | நவலடியான் எலக்ட்டிரிக்கல்ஸ் & ரீவைண்டிங் , கரூர் | **1.19**% அதிகம் |
| 3) | சிவசக்தி இன்ஜீனியரிங் வோர்க்ஸ், கரூர் | **2.24**% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**

**1)**மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**2)**மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் **1920** பிரிவு **15**ன்கீழ் அனுமதித்து பணியினை செய்து முடித்தமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம். **(இ2/5869/18)**

தீர்மான எண்.**1060** பதிவு செய்யப்பட்டது.

**62)**இந்நகராட்சி இனாம்கரூர் பகுதி குடிநீர் விநியோகத்தில் வாங்கப்பாளையம் நீருந்து நிலையத்தில் உள்ள **35**குதிரை திறன் கொண்ட நீர்முழ்கி மின்மோட்டார் இயங்கிக் கொண்டிருந்த நிலையில் உயர்மின் அழுத்தம் காரணமாக மின்மோட்டாரின் ஸ்டாட்டர் எரிந்து பழுதாகிவிட்டது. மேலும் நீருந்து நிலையத்தில் உள்ள **15** குதிரைதிறன் கொண்ட இரண்டு நீர்முழ்கி மின்மோட்டார்கள் பழுது மற்றும் அமராவதி (டான்சி டேங்க்) உள்ள **15**குதிரைகள் மோட்டார் உயர் மின் அழுத்தத்தின் காரணமாக பழுது ஸ்டாட்டர் சர்வீஸ் வாங்கல் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள **200**கே.வி.ஏ., ஜெனரேட்டர் ANF கன்ட்ரோல் பேனல் பழுது வாங்கப்பாளையம் நீருந்து நிலையத்தில் **60**குதிரை திறன் கொண்ட மின்மோட்டாரின் நீர் வெளியேற்றும் குழாயினில் (Delivery Line) 250MM., D.I., வீல் கேட் வால்வு புதிதாக கொள்முதல் செய்து பொருத்தும் பணி மற்றும் அமராவதி ஆற்றில் நீருற்று கிணற்றில் உள்ள **15**குதிரை திறன் கொண்ட நீர்முழ்கி மின்மோட்டாரின் ஸ்டாட்டர் பழுது மற்றும் கேபிள் பழுதானதை மற்றும் பணிகளை மேற்கொள்ள ரூ.**4,00,000/–**க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

**1)**மேற்படி பணிகளை மேற்கொள்ள ரூ.**4,00,000/–**க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அனுமதிக்கலாம்.

**2)**மேற்படி பணிக்கான மதிப்பீட்டு தொகையின்படி செலவினத்தினை குடிநீர் நிதியின் மூலம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.**1061** அனுமதிக்கப்பட்டது.

**63)**கரூர் நகராட்சிக்குட்பட்ட தாந்தோணி பகுதிக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு கட்டளையில் உள்ள புதிய மற்றும் பழைய நீர்சேகரிப்பு மற்றும் நீருற்று கிணறுகளில் தூர் வாரும் பணியினை **ரூ.0.90 இலட்சம் மதிப்பீட்டில்** உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் குடிநீர் விநியோக பணியின் அத்தியாவசிய அவசியத்தினை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டம் **15**ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள Sri.Krishana Traders, Karur, அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.**90000/-**த்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1) | Sri.Krishana Traders, Karur | **0.17%** குறைவு |
| 2) | G.Nanthakumar , Karur | **0.39%** அதிகம் |
| 3) | Arasi Electricals, Karur | **0.80%** அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**

**1)** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**2)**மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் **1920** பிரிவு **15**ன்கீழ் அனுமதித்து பணியினை செய்து முடித்தமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம். **(இ3/10078/18)**

தீர்மான எண்.**1062** பதிவு செய்யப்பட்டது.

**64)**கரூர் நகராட்சிக்கு சொந்தமான பொறியாளர் பிரிவு குடிநீர் விநியோக வாகன எண். TN 47 AD 6306 க்கு புதியதாக 2 எண்ணிக்கை கொண்ட TYRE, TUBE, FLAB SET சப்ளை செய்து பொருத்தும் பணிக்கு நகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பெறப்பட்ட விலைப்புள்ளி விபரம் பின்வருமாறு

| வ.எண் | நிறுவனத்தின் விலைப்புள்ளி விபரம் | டயர் அளவு மற்றும் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|
| 1 | MSP Tyres, Karur | 7-50-16 2 Tyres | 17,700/– |
| 2 | F1 Cars, Karur | 7-50-16 2 Tyres | 17,900/– |
| 3 | Thiru Kumaran Tyres, Karur | 7-50-16 2 Tyres | 18,000/– |

**அலுவலகக் குறிப்பு**

1)மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

2)மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள MSP Tyres அவர்களின் விலைப்புள்ளி ஏற்று பணி உத்திரவு வழங்கியதற்கும், செலவினத் தொகை ரூ.17,700/–யை வழங்குவதற்கும் மன்றம் அனுனுதிக்கலாம்.

3)மேற்கண்ட பணிக்குண்டான செலவினத் தொகையை நகராட்சி குடிநீர் நிதியின் மூலமாக மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (எச்4/7537/2018)

தீர்மான எண்.1063 அனுமதிக்கப்பட்டது.

65)கரூர் நகராட்சி வார்டு எண்.39, 46 மற்றும் 47 உள்ள தெருக்களில் மழைநீர் வடிகால் அமைக்க Survey எடுக்கும் அமைக்கும் பணிக்கு முதன்முறையாக 21.05.2018ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | Basis Line<br>15, Krishnammal Illam<br>Telugu Chettiyar street<br>Chithode, Erode-638 102 | ரூ.3000/– (1KM) |
| 2 | C.Sivakumar<br>Electronci Digital Survey<br>Hotel Oxford Near<br>26, Veerapathra Street<br>Erode | ரூ.3400/– (1KM) |
| 3 | A.Vimal<br>Digital Survey<br>271, Thingalur Main Road<br>KK Nagar, Nasiyanur, Erode | ரூ.3700/– (1KM) |

**அலுவலகக் குறிப்பு**

1)மேற்கண்ட பணிக்கு தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

2)மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள Basis Line, Erode ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

3)மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதியுடன் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணி ஆணை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(இ1/4717/2018)

தீர்மான எண்.1064 அங்கீகரிக்கப்பட்டது.

(ஒ/ம்) ப.அசோக்குமார்
தனி அலுவலர்
கரூர் நகராட்சி

//உண்மை நகல்//

ஆணையர்
கரூர் நகராட்சி